RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 28, 11 பெப்ரவரி 2022 இதழ்:- 42

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000


BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

# தமிழருக்கான நீதியை உறுதி செய்வது இலங்கை நலனுக்கு உகந்தது

## இந்திய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்து!



ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களிற்கு சமத்துவம் நீதி சமாதானம் கௌரவம் ஆகிய வற்றினை உறுதிப்படுத்துவதே இலங்கையின் நலனிற்கு உகந்த விடயம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார் இதற்கு அதிகாரப்பரவல் மிக முக்கியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (3ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் நிகழ்ச்சி நிரலில் முன்னணி?

மீனவர்கள் பிரச்சனையைத் தீர்க்க இந்தியா நடவடிக்கை எடுக்கும் என்று இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் உறுதியளித்தமையால் கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் கொண்டுவர இருந்த ஒத்தி வைப்பு வேளை பிரேரணையை தவிர்த்ததாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது (5ம் பக்கம் பார்க்க)



## 13 வேண்டுமா? வேண்டாமா?

13என்பதே பிரச்சனைக்குரிய எண் என்பார்கள். அதை நிரூபிப்பதைப் போலவே அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தமும் உள்ளது. 1987இல் இலங்கை இந்திய உடன்படிக்கையின் விளைவாக உருவாக்கப்பட்ட 13ஐ ஏற்றுக் கொள்வதில் தொடங்கிய நெருக்கடியானது அதை நடைமுறைப்படுத்துவது (7ம் பக்கம் பார்க்க)



## ஆறு கட்சிகளின் கடிதமும் அரசியல் பொய்களும்

கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!
போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



18 Years Real Estate Experience

HOMELIFE HIGHER STANDARDS


*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Markham & Brimortan



**Scarborough** **$1,850**
Bedrooms: 2 Washrooms: 2
All Utilities Included


### Derry/Goreway

**Mississauga** **$498,900**
Bedrooms: 2 Washrooms: 1
Great Opportunity First Time Buyers


### Burnamthorpe/Living Arts

**Mississauga** **$499,000**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Kitchen


### Kennedy / Hwy 401

**Scarborough** **$699,000**
Bedrooms: 2+1 Washrooms: 2
Approx. 790 Sq Ft.


### Yonge & Finch

**Toronto** **$819,900**
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1150 Sf Plus Balcony

### Bleasdale/ Creditview

**Brampton** **$849,000**
Bedrooms: 3 Washrooms: 2
End Unit, Villa Freehold Home

### Park Rd S/Phillip Murray Ave

**Oshawa** **$899,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Close To Schools, Shopping

### Rossland And Ravenscroft

**Ajax** **$899,000**
Bedrooms: 3+1 Washrooms: 3
Huge Open Concept Kitchen

### Mclaughlin/Elgin

**Brampton** **$949,000**
Bedrooms: 3+2 Washrooms: 4
Updated Kitchen, Pot Lights

### Brock & Dellbrook

**Pickering** **$1,299,000**
Bedrooms: 4+2 Washrooms: 4
Family Size Kitchen W/Out To Deck

### Markham/Ellesmere

**Scarborough** **$1,299,999**
Bedrooms: 4+2 Washrooms: 5
Newly Renovated

### Ellesmere/Conlins


**Scarborough** **$1,299,999**
Bedrooms: 4+1 Washrooms: 4
Basement W/Separate Entrance

### Westney/Rossland


**Ajax** **$1,499,000**
Bedrooms: 4 Washrooms: 5
Over 4600 Sq Ft Of Living Space.

### Bovaird/Torbram

**Brampton** **$1,499,999**
Bedrooms: 3+2 Washrooms: 4
Brand-New Kitchen

### Richmond St W/Peter St


**Toronto** **$2,250**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout Of 790 Sq Ft

### Sheppard Ave E/ 404


**Toronto** **$2,600**
Bedrooms: 2+1 Washrooms: 2
Good Exposure W/Natural Light

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 JAFFNA SUPER STORES**
**1221 MARKHAM RD - 14**
**(MARKHAM / EELESMERE)**

**3 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**4 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**5 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**6 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

**மொன்றியல் தொடர்புகளுக்கு**
**மார்சே துர்க்கா**
**(514) 276 9262**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**கியூபாவிற்கான சுற்றுலா**

கனடாவிலிருந்து குளிர்காலச் சுற்றுலாவுக்காக உங்களை பாதுகாப்பாக கியூபாவுக்கு அழைத்துச் செல்கின்றோம்.
உங்கள் விமானச் செலவு, தங்குமிட வசதிகள் உட்பட அனைத்துச் செலவு (Pakcage) உடன் மேலதிகமாக 400.00 டொலர்கள் மட்டுமே!
இத்தொகையில் ஊர்க்கோழி, ஆட்டுக்கறி, கடலுணவு வகைகள், நமது முறைப்படி சமைத்து நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து தருவதுடன் குதிரைச் சவாரி, 5க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்களையும் பார்வையிடலாம்.

முதியோருக்கான விசேட கவனிப்பு

மேலதிக விபரங்கட்கு - தவா
647.469.9839/647.333.0098

04 ஜனவரி 2022, 25 ஏப்ரல் 2022 இரண்டு சுற்றுலா குழ புறப்படுகின்றது. பதிவு செய்து கொள்ளுங்கள்

# தமிழருக்கான நீதியை உறுதி செய்வது இலங்கை நலனுக்கு உகந்தது

## இந்திய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்து!



ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களிற்கு சமத்துவம் நீதி சமாதானம் கௌரவம் ஆகியவற்றினை உறுதிப்படுத்துவதே இலங்கையின் நலனிற்கு உகந்த விடயம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்

இதற்கு அதிகாரப்பரவல் மிக முக்கியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின் போது அவர் இதனை வலியுறுத்தியுள்ளார். இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஈழ தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயங்கள் குறித்து இந்தியா எந்த அழுத்தங்களையும் கொடுக்கவில்லை என வழமை போன்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், தெரிவித்துள்ளார். இலங்கைத் தமிழர்களது பிரச்சினைகள் என்பது, உள்ளார்ந்த குறைபாடுகளால் எழுந்தவை. அவை அவதானத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்த பிரச்சினைகளின் ஆரம்ப புள்ளிகள் தொடர்பாக இன்னும் அவதானம் செலுத்தப்படவில்லை. எனினும் இவை தீர்க்க முடியாத பிரச்சினைகள் இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய அகழ்வு பணிகள் எதிர்வரும் 2 அல்லது 3 மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்றும், இந்தியாவில் இருந்து இலங்கை மின்சாரத்தைப் பெறக் கூடியதாக இருந்தால் பாரிய நன்மைகள் கிடைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# 13க்கு எதிராக சுயலாப அரசியல் செய்து தமிழ் மக்களை நட்டாற்றில் விடக்கூடாது என்று எச்சரிக்கிறார் சம்பந்தர்

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வோர் தமிழ் மக்களின் நன்மை கருதிச் செயற்பட வேண்டும். தமது சுயலாப அரசியலுக்காகத் தமிழ் மக்களை நட்டாற்றில் விடும் வகையில் அவர்கள் செயற்படக்கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

13 ஆவது திருத்தத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது படுமுட்டாள்தனமானது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

அரசமைப்பில் முதன்முறையாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதைத் தேசிய இனப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக ஏற்க முடியாது. இதைத் தீர்வுக்கான முதல் படியாக வைத்துக் கொண்டு நாங்கள் முன்னோக்கி நகர்ந்து வருகின்றோம்.

இந்நிலையில் 13ஆவது திருத்தத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது படுமுட்டாள்தனமானது. இப்படியான செயற்பாடு, இருப்பதையும் இழப்பதற்குச் சமமானது. அதனால் தான்



13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரி வருகின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# ஐ.நா.கடிதத்தில் 13ஐ குறிப்பிடாது சம்பந்தர் தவறிழைத்து விட்டார்! முன்னாள் தூதுவர் கலாநிதி தயான் ஜயத்திலக்க ஆதங்கம்





ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 47 உறுப்பு நாடுகளுக்கும் கடிதம் அனுப்பியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அதில் 13 ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தாது பெருந் தவறிழைத்து விட்டார் என்று கலாநிதி.தயான் ஜயத்திலக்க ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தினை மையப்படுத்தி பிரதமர் மோடிக்கு ஆறு தமிழ்க் கட்சிகளின் ஏழு தலைவர்கள் இணைந்து கடிதம் அனுப்பி சொற்ப நாட்களில் இவ்விதமாக சம்பந்தன் செயற்பட்டுள்ளமையானது முரண் நகையாக உள்ளதாக சுட்டிக் காட்டியதோடு இதனால் 13 ஆவது திருத்தச்சட்டத்தினை அரசாங்கம் புதிய அரசியலமைப்பினை பயன்படுத்தி ஒழிக்கும் போது தடுக்க முடியாத நிலைமைகள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது போகும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் தோற்கடிக்கப்பட்டாலும் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது என்றும் அவர் சுட்டிக் காட்டியதோடு அவ்விதமான விடயத்தினை குறிப்பிடாது கடிதமொன்றை அனுப்புவது பயனற்றதாகும் என்றும் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு கடிதம் அனுப்பியமை தொடர்பில் தாயன் ஜயத்திலக்க மேலும் தெரிவிக்கையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 47 உறுப்பு நாடுகளுக்கும் கடிதமொன்றை அனுப்புவதை நான் தவறு என்று கூறவில்லை. அந்தச் செயற்பாட்டினை தமிழ் மக்களின் தலைவராக அவர் செய்வது மிகவும் பொருத்தமானதொரு விடயமாகும்.

ஆனால் அவர் யதார்த்தமானதொரு விடயத்தினை தவிர்த்து விட்டிருக்கின்றார். 2009ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவான தீர்மானம் வெற்றி பெற்றது. அப்போதும் தீர்மானத்தில் 13ஆவது திருத்தச்சட்டம் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்பின்னர் 2012, 2013, 2014 2015 (இலங்கை இணை அனுசரனை வழங்கியது) 2021 ஆகிய ஆண்டுகளில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் போதும் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு 13 ஆவது திருத்தச்சட்டம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் ஆறு தீர்மானங்களில் காணப்படுகின்றது. அந்த ஆறுதீர்மானங்களில் ஒன்று மட்டும் இலங்கைக்கு ஆதரவானது. ஏனையவை எதிரானவை. ஆனால் தொடர்ச்சியாக தீர்மானங்கள் ஆதரவாக வந்தாலும் சரி எதிராக இருந்தாலும் சரி 13ஆவது திருத்தச்சட்ட விடயம் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது.

அவ்விதமானதொரு விடயத்தினை கவனத்தில் கொள்ளாது விடுவது பொருத்தமற்றது. அதேநேரம் சம்பந்தன் இம்முறை அனுப்பிய கடிதத்திலாவது 13ஆவது திருத்த விடயத்தினை கவனமாக கையாண்டிருக்க வேண்டும். ஏனென்றால் அவர் உள்ளிட்ட ஏழு தமிழ்த் தலைவர்கள் பிரதமர் மோடிக்கு 13 ஆவது திருத்தச்சட்டத்தினை வலியுறுத்தி கடிதமொன்றையும் அனுப்பியுள்ளார்கள்.

அவ்விதமாக கடிதம் அனுப்பிய பின்னரும் ஐ.நா.வுக்கு அனுப்பிய கடிதத்தில் 13ஐ குறிப்பிடாது விடுவது பொருத்தமற்றது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களில் இந்தியாவின் முயற்சியால் தான் 13ஆவது திருத்தச்சட்டம் உட்புகுத்தப்பட்டுள்ளது என்பதை சம்பந்தன் அறியாதவர் அல்லர். ஆகவே அந்த விடயத்தினை அவர் குறிப்பிடாது விடுகின்றமையானது பாரதூரமான விடயமாகும்.

இதனை விடவும் தற்போது இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு பொருளாதார நிதி உதவிகளை வழங்கியுள்ளது. இலங்கையின் பொருளாதார நெருக்கடிகள் மேலும் ஏற்படுகின்றபோது இந்தியாவின் பங்களிப்பு நிச்சயமாக இருக்கப் போகின்றது. இது இலங்கை இந்திய இருதரப்பு உறவுகள் சார்ந்த விடயம்.

ஆனால் இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட போன்றவர்கள் இந்திய அரசாங்கம் கோரும் முதலீட்டு மற்றும் அபிவிருத்தி திட்டங்களை வழங்குவதன் ஊடாக 13ஆவது திருத்தம் அரசியல் தீர்வு உள்ளிட்ட இந்தியாவின் கோரிக்கைகளை நீர்த்துப்போகச் செய்யலாம் என்று கணக்குப் போட்டிருக்கின்றார்கள்.

அதே நேரம் ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் புதிய அரசியலமைப்பில் மாகாண சபை முறைமைகளை நீக்கியுள்ளதாக தெரிய வருகின்றது. அவ்வாறான நிலையில் புதிய அரசியலமைப்பில் 13 ஒழிக்கப்பட்டிருக்குமாக இருந்தால் அதன் பின்னர் தமிழர்களுக்கு கிடைக்கப் போவது என்ன? ஐ.நா. தீர்மானத்தில் 13 குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதனை தமிழ்த் தரப்புக்களே கோராத போது இலங்கை அரசாங்கம் அது பற்றி கரிசனை கொள்ளும் என்று கூறவும் முடியாது.

ஆகவே 13 ஆவது திருத்தச்சட்ட விடயத்தினை சம்பந்தன் தனது கடிதத்தில் குறிப்பிடாது பெருந்தவறு இழைத்து விட்டார். இது சந்தர்ப்பங்களை வலுவிழக்கச் செய்துள்ளது என்றார்.


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

### கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# ஜனநாயகத்தை முற்றுகையிடும் உரிமை மக்களுக்கு இல்லையென பிரதமர் தெரிவிப்பு!



கனடாவில் அரசாங்கத்தின் கோவிட்-19 ஆணைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தை நிறுத்துவது குறித்து பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ட்வீட் ஒன்றை வெளியிட்டுள்ளார். கனடாவில் தலைநகர் ஒட்டாவாவில், கோவிட்-19 தடுப்பூ சி ஆணைக்கு எதிராக கனடாவில் உள்ள டிரக் ஓட்டுனர்களும், தடுப்பூசி எதிர்ப்பாளர்களும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கனேடிய நாடாளுமனர் அவலகத்தைச் சுற்றி வாகனங்களின் ஹாரன்களை நீண்ட நேரத்திற்கு ஒலிரச் செய்து நூதன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக கனேடிய அரசாங்கம் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியுள்ளது. இதனிடையே, 08 பெப் 2022 கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஒட்டாவாவில் கோவிட்-19 தடுப்பூ சி ஆணைக்கு எதிராக டிரக்கர்களின் போராட்டங்கள் 'நிறுத்தப்பட வேண்டும் என்று கூறினார்.

பொருளாதாரம் மற்றும் உள்ளூர்வாசிகள் மீதான ஆர்ப்பாட்டங்களின் தாக்கத்தை மேற்கோள் காட்டி, ட்ரூடோ தனது அதிகாரப்பூ ர்வ ட்விட்டர் பக்கத்தில், அரசாங்கத்துடன் கருத்து வேறுபாடு கொள்ள மக்களுக்கு உரிமை உண்டு, ஆனால் 'பொருளாதாரத்தை அல்லது நமது ஜனநாயகத்தை முற்றுகையிடும் உரிமை' இல்லை என்று வலியுறுத்தினார்.

மேலும், இந்த ஆர்ப்பாட்டம் விரைவில் நிறுத்தப்பட வேண்டும் என்று கூறிய அவர், தொடர் டீவீட்டில் 'இதுவரை, நூற்றுக்கணக்கான RCMP அதிகாரிகள் ஒட்டாவா பொலிஸ் சேவைகளுக்கு ஆதரவாக அணி திரட்டப்பட்டுள்ளனர்.

எங்களின் நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்த முனிசிபல் கூட்டாளர்களுடன் இணைந்து செயல்படுகிறோம், மேலும் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர தேவையான அனைத்து ஆதாரங்களுடனும் நாங்கள் தொடர்ந்து இருப்போம் என்று கூறியுள்ளார்.

# இந்தியத் தூதரகம் கோரியமையால் பிரேரணையைக் கைவிட்டது முன்னணி!

மீனவர்கள் பிரச்சனையைத் தீர்க்க இந்தியா நடவடிக்கை எடுக்கும் என்று இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் உறுதியளித்தமையால் கடந்த செவ்வாய்க் கிழமை பாராளுமன்றில் கொண்டுவர இருந்த ஒத்திவைப்பு வேளை பிரேரணையை தவிர்த்ததாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.இது தொடர்பில் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் கூறுகையில்,"வடக்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை பாராளு மன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் ஆகிய நான் முன் மொழிந்து பாராளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழிமொழிந்து விவாதத்தை ஆரம்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் குறித்த பிரேரணை மாலை 4. 50 மணியளவில் விவாதத்துக்கு கொண்டு வரப்படும் வகையில் பாராளுமன்றில் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. குறிப்பாக, எமது மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தடுக்காது, அவர்களின் வலைகள் அழிக்கப்படுவதையும், படகுகள் சேதமாக்கப்படுவதையும், மீனவர்கள் தாக்கப்படுவதையும், கொல்லப்படுவதையும் இலங்கை கடற்படையும் இலங்கை அரசும் வேடிக்கை பார்த்து கொண்டிருக்கின்றமை தொடர்பில் குறித்த விவாதத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தோம். இந்த நிலையில், கொழும்பிலுள்ள இந்திய தூதரகத் திலிருந்து அதிகாரி ஒருவர் தொடர்பு கொண்டு, எம்மால் முன்னெடுக்கப் படவிருந்த விவாதம் தொடர்பில் கலந்துரையாடினார். இதன்போது நாம், எமது வட பகுதி மீனவர்களின் கடற்றொழிலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில், இலங்கை கடற்படை நடவடிக்கை எடுக்காது எமது வட பகுதி மீனவர் களுக்கும் எல்லை தாண்டிவரும் மீனவர்களுக் கும் இடையில் மோதலை தீவிரப்படுத்தி பகைமையை வளர்க்கும் செயல்பாடு களில் ஈடுபட்டமை தொடர்பில் சபையின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் நாம் குறித்த விவாதத்தை ஏற்பாடு செய்துள்ளோம் என்ப தனை தெரிவித்தோம்.

இதன்போது, தூதரக அதிகாரி, இந்தப் பிரச்னை தொடர்பில் தமது தரப்பிலிருந்தும் தாம் அக்கறை செலுத்துவதாகவும், மேற்படி மீனவர் பிரச்னையானது யாழ்ப்பாணத்திலும், தமிழகத்திலும் ஒரு நெருக்கடி மிகுந்த சிக்கல் நிலைக்கு வந்துள்ளதாகவும், அந்த நெருக்கடி நிலையை தாம் புரிந்து கொண்டுள்ளோம் என்றும் அந்த வகையில் இப்பிரச்னையை கட்டுப் படுத்துவதற்கு தாம் முடிவெடுத்துள்ளதாகவும், தாம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளுக்கு வாய்ப்பளிக்கும் முகமாக குறித்த விடயத்தை பாராளுமன்றத்தில் விவாதிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீனவர்கள் பிரச்னையை தீர்ப்பதற்கான அவர்கள் முயற்சிக்கு ஒத்துழைக்கும் வகையில் குறித்த பிரேரணையை விவாதத்திற்கு எடுப்பதைத் தவிர்த்துக் கொண்டுள்ளோம் என்று கூறினார்.

## இந்திய நிகழ்ச்சி நிரலில் முன்னணி?

இந்தியாவின் நிகழ்ச்சி நிரலின் கீழ் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் செயற்படுகிறார்கள் என்பது அம்பலமாகின்றது என வடக்கு மாகாண கடற்தொழிலாளர்கள் இணைய தலைவர் என் வி சுப்பிரமணியம் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார் பாராளுமன்றத்தில் கைவிடப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரி விக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கின்றார் அதாவது சுயபுத்தியில் ஒரு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தனது பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருந்தார்

ஆனால் அவர் ஒரு நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு செயற்பட்டதன் காரணமாக அந்த நாடு அந்த பிரேரணையை கொண்டு வர விரும்பவில்ல அதிலிருந்து ஒன்றை நாங்கள் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது அந்த கட்சியினர் யாருடைய நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுகின்றார்கள் என்று எனவும் தெரிவித்துள்ளார். ஒரு நாட்டுப் பிரதிநிதி பிரேரணையை நிறைவேற்ற வேண்டாம் என கூறியதற்கு இணங்க அந்த பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டு வரவில்லை என்றால் அந்த கட்சியினர் இந்திய அரசின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுகிறார்கள் என்பதை உறுதியாக நம்ப வைக்கின்றது என்றார்.

# எந்த சக்திகள்?

ஜனாதிபதி தனது சுதந்திர தின உரையில் இலங்கைக்கு எதிராக சர்வதேச சக்திகள் ஒன்றிணைந்துள்ளதாக குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் அந்த சக்திகள் யார் என்று அவர் குறிப்பிடவில்லை. அரசாங்கம் தொடர்ந்தும் நெருக்கடிகளை சந்தித்து வரும் நிலையில் தான் ஜனாதிபதி இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார். 2015இல் மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்த போது, உடனடியாகவே அவர் இந்திய உளவுத் துறையின் மீதே குற்றம் சாட்டியிருந்தார். ஒரு சில தினங்களில் அமெரிக்க பிரித்தானிய உளவுத் துறைகள் மீதும் அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

சந்திரிக்கா குமாரதுங்க பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கான தயாரிப்பு பணிகளை ஆரம்பித்திருப்பதாக செய்திகள் வெளிவந்திருக்கும் சூழலில் தான், ஜனாதிபதி, சர்வதேச சக்திகள் தொடர்பில் பேசியிருக்கின்றார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறைவுற்றதை தொடர்ந்து, இலங்கைத் தீவின் அரசியல், தொடர்ந்தும் நெருக்கடிளையே சந்தித்து வருகின்றது. இந்த நெருக்கடிகளில் இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தம் ஒரு துருப்பு சீட்டாகவே பயன்படுத்தப்படுகின்றது. யுத்தத்திற்கு பின்னரான இலங்கைத்தீவு அதிகம் சீனாவுடன் நெருங்கிச் சென்றது. இவ்வாறானதொரு சூழலில் தான், 2012இல், ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் பொறுப்பு கூறல் தொடர்பில் முதலாவது பிரேரணை கொண்டுவரப்பட்டது. அமெரிக்கா இதற்கான ஆதரவை வழங்கியிருந்தது. அமெரிக்கப் பிரேரணை என்றே இது அழைக்கப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அகப்படப் போகின்றனர். அவர்களில் பலர் கொல்லப்படப் போகின்றனர் என்பது ஏற்கனவே தெளிவாகவே அனுமானிக்கப்பட்டது. இறுதியில் எதிர்பார்த்தவாறே முள்ளிவாய்க்கால் பல்லாயிரக்கணக்கான உயிர்களை காவு கொள்ளப்பட்டன. இறுதி யுத்தத்தின் போது, ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளராக இருந்த கோடன் வைஸ் 'கூண்டு' என்னும் பெயரில் நூலொன்றையும் எழுதியிருக்கின்றார். யுத்தத்தின் போக்கையும் அதனால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்படப் போகின்றனர் என்பதையும் மேற்குலக நாடுகள் நன்றாகவே அறிந்திருந்தன.

மேற்கின் வீதிகளில் புலம்பெயர் சமூகம், ஆயிரக்கணக்கில் திரண்டு தங்களது எதிர்ப்பை வெளியிட்டிருந்தன ஆனால் யுத்தத்தை நிறுத்தி, மக்களை காப்பாற்றுங்கள் என்னும் குரலுக்கு எந்தவொரு நாடுமே செவி சாய்க்கவில்லை. இன்று ஜனநாயகம் மனித உரிமைகள் தொடர்பில் பேசும் எந்தவொரு நாடும் யுத்தத்தை தடுக்க முயற்சிக்கவில்லை. ஆனால் யுத்தம் முடிந்ததும் பொறுப்பு கூறும் விடயத்தை கையிலெடுத்தன. இதிலிருந்து நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையின் மீதான அழுத்தங்கள் ஈழத் தமிழர்களுக்கானது அல்ல. ஆனால் ஈழப் போரின் விளைவுகளை முன்வைத்தே அனைத்தும் நடக்கின்றன. இனியும் நடக்கப் போகின்றன.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போதும், சர்வதேச சக்திகள் மீதே அனைவரது பார்வையும் திரும்பியது ஆனால் அந்த ஆட்சி மாற்றம் எதிர்பார்த்த விளைவுகளை தரவில்லை. இவ்வாறானதொரு சூழலில் தான் மீண்டும் ஆட்சி மாற்றம் தொடர்பான சிந்தனைகள் எட்டிப்பார்க்கின்றன. எதிரணிகள் சந்திப்புக்களை மேற்கொள்கின்றன. இப்படியானதொரு பின்னணியில் தான் ஜனாதிபதியும் சர்வதேச சக்திகள் தொடர்பில் பேசியிருக்கின்றார்.

இலங்கைத் தீவின் அரசியலில் சர்வதேச சக்திகளின் தலையீடுகள் தவிர்க்கவே முடியாதவை. எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்த நிலைமையிலிருந்து இலங்கைத்தீவு இனி தப்பவே முடியாது. கொழும்பில் எவர் ஆட்சியிலிருந்தாலும், அவர்கள் வெளியாரை அனுசரித்துத்தான் நடக்க வேண்டும். அதே போன்று தமிழ் தேசிய அரசியல் தரப்புக்களுக்கும் (20ம் பக்கம் பார்க்க)



# பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக வெளியிடப்பட்ட வர்த்தகமானியில் முக்கிய விடயங்கள் இல்லை - ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டு!



இலங்கை அரசாங்கம் முன்மொழிந்துள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் மீதான திருத்தங்களை வரவேற்றுள்ள ஐரோப்பிய ஒன்றியம் இது தொடர்பில் வெளியாகியுள்ள வர்த்தமானியில் முக்கிய விடயங்கள் இடம் பெற்றிருக்கவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை சர்வதேச மனித உரிமை பேரவை மற்றும்அதன் பொறிமுறைகளுடன் ஒத்துழைப்பை ஈடுபாட்டை தொடர வேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் வலுவான விதத்தில் வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை இலங்கை குறைக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையும் தங்களின் கூட்டு ஆணைக்குழுவின் 24வது கூட்டத்தினை 8ம் திகதி பிரசல்ஸ்சில் நடத்தின.

சினேகபூர்வ திறந்த சூழ்நிலையில் இடம்பெற்ற இந்த சந்திப்பு இருதரப்பு உறவுகள் குறித்தும் ,நல்லாட்சி நல்லிணக்கம் மனித உரிமைகள் வர்த்தகம் காலநிலை மாற்றம் சூழல் பாதுகாப்பு பயங்கரவாதம் உட்பட இரு தரப்பு நலன்களுடன் தொடர்புடைய பல தரப்பட்டவிடயங்கள் குறித்து கருத்துக்களை பரிமாறியது.

கொவிட் 19 பெருந்தொற்றினை பொறுத்த வரை இலங்கையின் சிறப்பான தொற்றுநோய் மூலோபாயத்திற்காக ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையை பாராட்டியது.

பெருந் தொற்றினால் தீவிரமடைந்துள்ள பலவீனங்கள், சமத்துவமின்மைகளிற்கு தீர்வை காண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஐரோப்பிய ஒன்றியம் கொவிட்தடுப்பூசிகள் வருமானம் குறைந்த — நடுத்தர வருமானம் பெறும் நாடுகளிற்கு நியாயமான சமமான முறையில் கிடைப்பதை உறுதி செய்வதற்கான தனது அர்ப்பணிப்பை வலியுறுத்தியது.

சர்வதேச தடுப்பூசி சமத்துவத்திற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்பை இலங்கை வரவேற்றது. ஐரோப்பிய ஒன்றியத்திலும் இலங்கையிலும் உரிய நடவடிக்கைகள் மற்றும் சட்ட மூலங்கள் குறித்து தகவல்களை பரிமாறுவதற்கு இந்த சந்திப்பு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தது.

ஜனநாயகம் நல்லாட்சி சட்டத்தின் ஆட்சி மனித உரிமைகள் சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகள் கருத்து சுதந்திரம் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் போன்றவை குறித்து கலந்துரையாடல்களின் போது கவனம் செலுத்தப்பட்டது. இலங்கை நல்லிணக்கம் ,மற்றும் சுயாதீன ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து எடுத்துரைத்தது.

குறிப்பாக காணாமல் போனவர்களின் அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஐக்கியம் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் இலங்கையின் மனித உரிமை ஆணையகம் ஆகியவை குறித்து இலங்கை சுட்டிக்காட்டியது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை மனித உரிமை பேரவை மற்றும் அதன் பொறிமுறைகளுடன் ஈடுபாட்டை ஒத்துழைப்பை தொடர வேண்டும் என வலுவான விதத்தில் வலியுறுத்தியுள்ளது.

இந்த சூழமைவில் ஐரோப்பிய ஒன்றியம் சுயாதீன அமைப்புகள் சுதந்திரமாகவும், சிறப்பாகவும் செயற்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. சிவில் சமூகத்தை வலுப்படுத்தவேண்டியதன் ,அது அதன் முழுமையான பன்முகத் தன்மையுடன் செயற்படுவதற்கான தளத்தை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தை ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையும் ஏற்றுக்கொண்டன.

நீதிச்சீர்திருத்தம் மற்றும் நல்லிணக்கத்திற்கு இலங்கைக்கான தனது தொடர்ச்சியான ஆதரவை ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் முன்மொழிந்துள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தின் மீதான திருத்தங்கள் என சமர்ப்பிக்கப்பட்டவற்றை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றது.

எனினும் வர்த்தமானியில் வெளியாகியுள்ள திருத்தப்பட்ட சட்டமூலத்தில் முக்கியமான கூறுகள் இடம் பெற்றிருக்கவில்லை என ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை சர்வதேச தராதரத்திலானதாக மாற்றுவதற்காக எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் முன் வைத்த கருத்துக்களை இலங்கை கருத்தில் எடுத்தது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையை பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை குறைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளதுடன் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாமல் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை பிணையில் விடுதலை செய்வதற்கான நடைமுறை சாத்தியமான நிர்வாக நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழத்து - தமிழகக் கலைஞர்களோடு
ஈழநாடு 29வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2022
07 ஆகஸ்ட் 2022

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்
Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை
Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# 667 நாட்களின் பின்னர் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா விடுதலை!

பிரபல மனித உரிமைகள் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் 667 நாட்கள் சிறைப்படுத்தலின் பின்னர் 08 பெப்ரவரி 2022 பிணையில் விடுவிக்கப்பட்டார். மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதிகளான மேனகா விஜேசுந்தர, நீல்இத்தவல ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம், ஹிஜாஸ் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட CA/ PHC/APN/10/22 எனும் மனுவின் உத்தரவாக அவருக்கு பிணையளிக்குமாறு கடந்த 7 ஆம் திகதி அறிவித்தனர்.

அந்த உத்தரவுக்கு அமைவாக சிலாபம் மேல் நீதிமன்ற நீதிபதி குமாரி அபேரத்ன ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை பிணையில் செல்ல அனுமதித்தார். அதன்படி ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணை, 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் ஹிஜாஸை விடுவிக்க மேன் முறையீட்டு நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய நீதிபதி குமாரி அபேரத்ன கட்டளையிட்டார். இதனைவிட பிணை நிபந்தனைகளாக இதுவரை ஹிஜாஸ் தனது கடவுச் சீட்டை புத்தளம் மேல் நீதி மன்றில் சமர்ப்பித்திருக்காத நிலையில் அது திறந்த மன்றில் உடனடியாக் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் தனது நிரந்தர வதிவிடத்தை அவர் உரியகிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் மேல் நீதிமன்று க்கு பிணை நிபந்தனையாக முன் வைத்தார்.

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை தாக்குதல்கள் குறித்த விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டு சி.ஐ.டி.யில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் தற்போது சதி செய்தமை, சமூகங்களிடையே வெறுப்புணர்வை தூண்டிய குற்றச்சாட்டுக்களின் வெலிக்கடை புதிய மெகசின் சிறையில் விளக்கமறியலில் அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 16 வயது சிறுமியின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணையில் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத்தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் ராஜீந்திர ஜயசூரிய, மூன்று மாதங்களுக்கு பயணத்தடையை நீக்கியதுடன் பாராளுமன்ற உறுப்பினர் பதியுதீனின் கடவுச்சீட்டை விடுவிக்கவும் உத்தரவிட்டார். முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் கொழும்பு பௌத்தாலோக்க மாவத்தை வீட்டில் வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்பட்டிருந்த ஹட்டன் டயகம பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். ரிஷாத் பதியுதீனின் மனைவி மாமனார் மற்றும் தரகர் ஆகியோரும் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# “இனப்படுகொலை” என்பதால் இலங்கை கவலையடைகிறது! கனடாவுக்கான இலங்கைத் தூதரகம் அறிக்கை வெளியீடு!

2009இல் முடிவடைந்த இறுதிக் கட்ட மோதலை இலங்கை தமிழ் மக்களுக்கு எதிரான இனப் படுகொலையாக சித்தரிக்க கனடாவில் உள்ள சில தரப்பினர் முயற்சிப்பது இலங்கைக்கு கவலை அளிக்கிறது என்று கனடாவில் உள்ள இலங்கை தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அத்துடன் இறுதிப் போரில் இறந்தவர்களில் பெரும்பான்மை யானவர்கள் விடுதலைப் புலிகள் அல்லது நேரடியாகப் போரில் ஈடுபட்டவர்களாக இருந்திருப்பார்கள் என்றும் அது ஊகம் வெளியிட்டுள்ளது.

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் தமிழ் இனப் படுகொலை கல்வி வாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் வெளியிட்ட நீண்ட அறிக்கையிலேயே கனடாவுக்கான தூதரகம் மேற்படி கூறியுள்ளது.

அந்த அறிக்கையில் ஒன்ராறியோவின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ் அப்பாவி தமிழ் மக்களுக்கு எதிராக நடை பெற்ற ஒரு இனப்படுகொலையை நாங்கள் அங்கீகரிக்கின்றோம் மற்றும் கொழும்பில் ஆட்சியின் கைகளில் 140,000 அப்பாவிகள் கொல்லப்பட்ட ஒரு இனப்படு கொலை என்பன உள்ளிட்ட கருத்துக்களைக் குறிப்பிட்டிருந்தமை தொடர்பில் நாங்கள் ஏமாற்றம் அடைகின்றோம்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஸ்கார்பரோ ரூஜ் பார்க் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலமும் தனது கருத்துக்களில் தமிழ் இனப்படு கொலை என்று குறிப்பிட்டுள்ளார்.

2021 ஏப்ரல் 07ஆம் திகதியிட்ட இராஜதந்திரக் குறிப்பில் கனடாவின் வெளியுறவு, வர்த்தகம் மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் இலங்கையில் இடம் பெற்ற இனப்படு கொலை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கனடாவின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிவிவகார வர்த்தகம் மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் தெளிவுபடுத்தியுள்ளது.

இலங்கையில் இனப்படுகொலை இடம் பெற்றதாக கனடா அரசாங்கம் கண்டறியவில்லை என்பதை திணைக்களம் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்த முடியும் எனக் குறிப்பிட்டுள்ள தெளிவுபடுத்தலை நாங்கள் பாராட்டு கின்றோம். மேலும் கனடா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக தடை செய்துள்ளது.

இந்தப் பின்னணியில் 'தமிழ் இனப்படுகொலை' என்ற வார்த்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுவது ஒன்ராறியோவில் வசிக்கும் இலங்கைக் கனேடியர்களின் பிள்ளைகள் மற்றும் சமூகத்தினரிடையே கருத்து வேறுபாடுகளையும் தப்பான அபிப்பிராயத்தையும் உருவாக்குகின்றது. எனவே சமூக நல்லிணக்கத்தை கருத்திற் கொண்டு சர்வதேச சமூகத்தில் இலங்கை பற்றிய தவறான கருத்துக்கள் பரப்பப்படுவதை தடுக்கும் வகையில் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை நிராகரிக்க வேண்டும்.

இலங்கையில் இறுதிக்கட்ட மோதலின் போது உலகம் கண்ட மிகக் கொடூரமான பயங்கரவாதக் குழுக்களில் ஒன்றான தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற சர்வதேச அளவில் தடை செய்யப்பட்ட பயங்கரவாதக் குழுவை அரசாங்கப் படைகள் எதிர்கொண்டன.

2009இல் இராணுவ மோதலின் இறுதிக் கட்டங்களில் விடுதலைப்புலிகள் தவிர்க்க முடியாத தோல்வியை எதிர் கொண்ட போது தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாக பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்ததுடன் மோதல் பிரதேசங்களிலிருந்து பொது மக்களை நகர்த்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மறுத்திருந்தனர். பொதுமக்கள் உயிரிழப்புக்கள் குறித்த குற்றச்சாட்டு மற்றும் எண்ணிக்கையை மிகைப்படுத்திக் கூறுவதானது அரசாங்கத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக வெளிநாட்டுத் தலையீட்டை வலுக்கட்டாயப்படுத்த புலிகள் முயன்ற வழிமுறையாகும். எனவே விடுதலைப் புலிகளுடனான இராணுவ ஈடுபாட்டின் போது இனப்படுகொலை என்ற போலியான குற்றச்சாட்டுக்களின் செயல் மற்றும் அல்லது உள்நோக்கம் இருந்ததாகக் கூறுவதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை.

இனப்படுகொலையை பரிந்துரைக்கும் நிகழ்வுகளின் வடிவமும் இல்லை. இராணுவ மோதலின் கடைசிக் கட்டத்தில் நிலைமையைக் கருத்தில் கொண்டு தந்திரோபாய தெரிவுகள் நியாயமானவையும் விகிதாசாரமானவையுமாகும் என இராணுவ நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளன ஐ. நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழு அறிக்கை கூட இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான 'இனப்படு கொலை குற்றச்சாட்டைக் கொண்டிருக்கவில்லை.

2015இல் இலங்கை மீதான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் விசாரணைக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் முக்கிய கண்டு பிடிப்புக்கள் இலங்கையின் 'போர்க்குற்றங்கள்', 'இனப்படுகொலை' என்று கூட பரிந்துரைக்கவில்லை.

இனப்படுகொலையின் கூற்றை ஆதரிக்கும் குழுக்கள் மோதலின் இறுதி மாதங்களில் '40,000 பொதுமக்கள் இறந்திருக்கலாம்' என நிபுணர்கள் குழு அறிக்கையில் எந்த ஆதாரமும் இல்லாமல் செய்யப்பட்ட கூற்றை பின்பற்றுகின்றனர். இலங்கை இராணுவத்தால் இறுதியாக மீட்கப்பட்ட மக்களின் உண்மையான எண்ணிக்கையை வைத்து 40,000 பொதுமக்கள் மரணங்கள் இடம் பெற்றன என்ற கற்பனையான புள்ளி விவரத்துடன் நிபுணர்கள் குழு அறிக்கை வெளிவந்ததுடன் 3 இலட்சத்து 30ஆயிரம் என்ற அனுமான எண்ணிக்கைக்கு எதிராக இது அண்ணளவாக 290,000 ஆகும்.

ஜூலை 2006 முதல் மே 2009 வரை விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப்போரின் போது இலங்கை இராணுவத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5,876 ஆகும். 2008 மற்றும் 2009 இல் இயற்கை அல்லாத காரணங்களால் வடக்கு மாகாணத்தில் இறந்ததாகக் கூறப்படும் (9,283) இலங்கையின் ஆயுதப் படைகளை விட விடுதலைப் புலிகள் அதிக எண்ணிக்கையிலான இறப்புகளைச் சந்தித்திருப்பார்கள் என்று கருதுவது தர்க்க ரீதியானதாக இருக்கும் என்பதுடன் அவர்களில் பெரும்பான்மையானவர்கள் விடுதலைப் புலிகள் அல்லது நேரடியாகப் போரில் ஈடுபட்டவர்களாக இருந்திருப்பார்கள் என்று கூறப்பட்டுள்ளது.


LAW OFFICE of THELMA WILLIAMS

Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

❑ FAMILY LAW:
- Divorce
- Separation
- Property Division

❑ REAL ESTATE

❑ WILLS and ESTATES

❑ EMPLOYMENT LAW
- ODSP, CPP disability
- Wrongful Dismissal
- Long-term Disability

❑ ADMINISTRATIVE LAW

❑ POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

❑ விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,

❑ காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்

❑ உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்

❑ தொழில்சார் சட்டம்

❑ நிர்வாக சட்டம்

❑ சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை

Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT

# ஹிட்லரைப் போன்று இலங்கையில் கோட்டா ஆட்சி நாடாளுமன்றத்தில் இரா.சாணக்கியன் ஆவேசம்!

இலங்கையில் ஹிட்லரைப் போன்றுதான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சி நடத்தி வருகின்றார். ஹிட்லர் தனது கடைசிக் காலத்தில் ஜேர்மனியர்கள் எத்தனை பேர் இறந்தாலும் பரவாயில்லை என்று தனது கொள்கையைச் செயற்படுத்தி வந்தார். அதே போன்று தான் ஜனாதிபதி கோட்டாபயவும் செயற்பட்டு வருகின்றார். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.



சர்வதேசத்துடன் எவ்வாறு கதைப்பதென்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து இலங்கை அரசு கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டின்னார்.

நாடாளுமன்றத்தில் 08 பெப்ரவரி 2022 உரையாற்றிய போதே சாணக்கியன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது –

நான் கொரோனாவால் பாதிக்கப் பட்டு தனிமையில் இருந்த போது முக நூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங் களில் சில காணொளிகளைப் பார்த்தேன்.

இதில் ஒன்றில், ஹிட்லரைப் போன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சி செய்ய வேண்டும் என்று கூட ஒருசிலர் கூறியிருந்தனர். உண்மையில், இன்று ஹிட்லரைப் போன்று தான் ஜனாதிபதி ஆட்சி நடத்தி வருகின்றார். ஹிட்லர் தனது கடைசிக் காலத்தில் ஜேர்மனியர்கள் எத்தனை பேர் இறந்தாலும் பரவாயில்லை என்று தனது கொள்கையைச் செயற்படுத்தி வந்தார். அதேபோன்று தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் செயற்பட்டு வருகிறார். ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்கள் ஒவ்வொருவராக வழக்குகளில் இருந்து விடுதலை செய்யப்படுகின்றார்கள். இன்று நாட்டில் நீதிக்கு என்ன நடந்தது எனும் கேள்வி எழுந்துள்ளது.

நாட்டில் இன்று பொருளாதார யுத்தம் ஒன்று இடம்பெற்று வருகின்றது. இதில் ஜனாதிபதி உள்ளிட்ட ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியினர் தோல்வியடைந்து வருகின்றார்கள். எனவே, இனியும் மக்களைத் துன்பத்துக்கு உள்ளாக்க வேண்டாம் என அரசிடம் கேட்டுக் கொள்கின்றோம். கொரோனாவால் பல உயிர்களை நாம் இழந்து விட்டோம். இந்த நிலையில், உணவின்றியும் மக்களின் உயிர்களைப் பறிக்க வேண்டாம் என நாம் இவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். நாட்டின் பொருளாதாரத்தை முதலில் உயர்த்த நடவடிக்கை எடுக்கவும். பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாத தரப்பிடம் இந்த நாடு இன்று சிக்குண்டுள்ளது. கறுப்புப் பணத்தைக் கொண்டு வடகொரியாவிடமிருந்து ஆயுதம் வாங்கியதாக நிதி அமைச்சர் கூறியுள்ளார். இது சரியாயின் இந்த விவகாரம் தொடர்பாக உடனடியாக விசாரணையை ஆரம்பிக்க வேண்டும். வடகொரியா என்பது பொருளாதாரத் தடைக்குட்பட்ட நாடாகும். இந்த நாட்டிலிருந்து எவ்வாறு கறுப்புப் பணத்தைக் கொடுத்து ஆயுதம் வாங்க முடியும்? வடக்கில் இன்று மீனவர்களுக்குப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக அங்கு போராட்டங்கள் மேற்கொள்ளப் படுகின்றன.


அண்மையில் இந்திய மீனவர்களின் படகு மோதுண்டு இலங்கையைச் சேர்ந்த 2 மீனவர்கள் உயிரிழந்தார்கள். ஆனால், கடற்றொழில் அமைச்சருக்கு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண முடியாமல் உள்ளது. யாழில் கடலில் இருந்து கண் பார்வைக்கு எட்டிய தூரத்தில் இந்திய மீனவர்கள் மீன் பிடித்தும் அவர்களைக் கைது செய்ய முடியாதுள்ளது.

சர்வதேசத்துடன் எவ்வாறு கதைப்பதென்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள். நீதி அமைச்சர் அலி சப்ரி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதன் மூலம் சர்வதேசத்துடன் ஒன்றித்துச் செயற்பட முடியாது. இதன் ஊடாக ஐ.நாவுக்குப் பதில் வழங்க முடியாது.

யாழ்ப்பாணத்துக்குச் சென்று காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நட்டஈடாக ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படும் என்று நீதி அமைச்சர் கூறியுள்ளார். 2009 இல் இருந்து தாய்மார் போராடுவது இந்த ஒரு இலட்சம் ரூபாவுக்காக அல்ல என்பதை அரச தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டும். காணாமல் ஆக்கப் பட்ட தங்களின் உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்றுதான் அவர்கள் கோருகின்றார்கள். இது அவர்களின் உரிமையாகும்.

இதற்குப் பதில் வழங்காமல், யாழ்ப்பாணத்துக்குச் சென்று ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்துவதால் சர்வதேச பிரச்சினைகளுக்குத் தீர்வொன்று கிடைத்து விடாது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதாயின் சரியான முறையில் அதனைக் கையாள வேண்டும். அதேநேரம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட எத்தனை தமிழ் — முஸ்லிம் இளைஞர்கள் இன்னமும் சிறையில் வாடுகிறார்கள்? எனவும் கேள்வி எழுப்பி உரையாற்றினார்.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

13 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமை
பிரதோஷ விரதம்

16 பெப்ரவரி 2022 புதன்கிழமை
மாசிமகம் விரதம் பூஜை
உபயம்:- பா.உதயகுமார்

15 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமை
பௌர்ணமி விரத பூஜை
உபயம்:- அழகேசன் குடும்பம்

28 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை
மகாசிவராத்திரி விரதம்

இரவுப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்

இவ்வண்ணம்:- ஆலய தர்மகர்த்தா சபையினர்

# 13 வேண்டுமா? வேண்டாமா?

அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் ஊர்திப் போராட்டமொன்றை ஆரம்பித்திருக்கிறது. இந்த ஊர்திகள் வவுனியாவிலிருந்து நெடுங்கேணி வழியாக முல்லைத்தீவுக்குச் சென்று கிளிநொச்சிக்குச் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் போயிருக்கின்றன. பின்பு யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் ஒரு கூட்டம் நடந்துள்ளது.



ஆனால் இந்தப் 13இன் விளைவான மாகாண சபைக்கான தேர்தலில் தாம் தம்முடைய கட்சி போட்டியிடுவோம் என்று கஜேந்திரகுமார் சொல்லிருக்கிறார். இதற்கு அவர் ஒரு (சப்பைக் கட்டு) நியாயத்தையும் சொல்லியுள்ளார்.

அதாவது மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்த பின்பு இந்த மாகாணசபையில் எந்த அதிகாரமும் இல்லை என்று உலகத்துக்குப் பிரசித்தம் பண்ணப் போகிறாராம். இதைக் கேட்கும் போது உங்களுக்குச் சிரிப்பு வரலாம். கூடவே பலருக்கும் கோபமும் ஏற்படக் கூடும்.

ஏனென்றால் 1987இல் இந்த உடன்படிக்கை செய்யப்பட்டபோதே அதனைப் புலிகள் எதிர்த்தனர். அதற்குப் பிறகு மாகாணசபை முறையை நிராகரித்தும் இந்தியப் படைகளை எதிர்த்தும் விடுதலைப் புலிகள் 2009 வரை செயற்பட்டனர். அவர்கள் சொன்ன காரணம் இந்த மாகாணசபையில் எதுவுமே இல்லை. இதற்காக அவர்கள் செலவிட்ட காலமும் இழந்த இழப்புகளும் கொஞ்சமல்ல. இறுதியில் தம் பதவிக்கு அதிகாரத்துக்கு வந்த பின் என்னவெல்லாம் நடக்கும் என்பது யாரும் அறியாத ரகசியமோ வித்தையோஅல்ல. ஆக இது ஒரு சுத்த மான பம்மாத்து என்பதற்கு அப்பால் வேறொன்றுமேயில்லை. எப்படி அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் கட்சியாக இருந்து கொண்டே தேர்தலில் வாக் கெடுப்பதற்கான தந்திரோபாயமாக தமிழ்த்தேசியமக்கள் முன்னணி என்ற பெயரையும் மஞ்சள் சிவப்பு வண்ணத்தையும் பயன்படுத்திக் கொள்கிறார்களோ அதைப் போலத் தான் இதுவும். சுத்த ஏமாற்று. ஆனால் இதைப் புரிந்து கொள்ளாமலும் புரிந்து கொள்ள மறுத்தும் ஒரு தரப்பினர் கம்பு சுத்துவார்கள். இவர்களால் தான் தலைவர்கள் எப்போதும் தங்களை வளப்படுத்திக் கொள்வது.

மறுவளத்தில் சிங்களத்தரப்பில் 13 அல்லது மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வோ தேவையில்லை என்று சொல்லி எதிர்க்கின்ற போக்குத் தீவிரமடைந்து கொண்டிருக்கிறது. தொடக்கத்திலிருந்தே இந்தப் 13 சோதனைக்குட்பட்டே வந்திருக்கிறது.

இலங்கை இந்திய உடன்படிக்கையை அப்போதே (1987) ஐ.தே.கவின் ஒரு பகுதியினர் ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாக இந்த உடன்படிக்கை செய்யப்பட்டபோது அதிகாரத்தில் இருந்த பிரதமர் ஆர்.பிரேமதாசவும் அவருக்கு நெருக்கமானவர்களும் இதைப் பகிரங்கமாகவே எதிர்த்தனர். இது தொடர்பாக அப்பொழுது நடந்த எந்த உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளிலும் பிரேமதாசவும் அவருடைய அணியினரும் பங்கு பற்றவில்லை.

அவர் ஜனாதிபதியாக வந்த பிறகு மாகாணசபையைச் செயலிழக்க வைக்கும் காரியங்களிலேயே மும்முரமாக ஈடுபட்டார். இதற்காக அவர் அன்று விடுதலைப்புலிகளையும் பயன்படுத்திக் கொண்டார். காரணம் விடுதலைப் புலிகளுக்கும் இந்தப் 13இலும் அதன் விளைவாக உருவாக்கப்பட்ட மாகாணசபை முறையிலும் விருப்பில்லை. எனவே இதை வாய்ப்பாகக் கொண்டு புலிகள் பிரேமதாச பேச்சு வார்த்தை நடைபெற்ற போது அன்றி 13என்பதே பிரச்சனைக்குரிய எண் என்பார்கள். அதை நிருபிப்பதைப் போலவே அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தமும் உள்ளது. 1987இல் இலங்கை இந்திய உடன்படிக்கையின் விளைவாக உருவாக்கப்பட்ட 13ஐ ஏற்றுக் கொள்வதில் தொடங்கிய நெருக்கடியானது அதை நடைமுறைப் படுத்துவது வரையில் 35 ஆண்டு களாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

இப்பொழுது இந்தப் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மோடிக்குத் தமிழ்த்தேசிய அடையாளத்தை வலியுறுத்தும் கட்சிகள் சில கடிதம் எழுதிமிருக்கின்றன. இந்தக் கடிதத்தை எழுதுவதற்குப் பட்டபாடு கொஞ்சமல்ல.

முதலில் மலையகக் கட்சிகளும் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளும் தமிழ்க்கட்சிகளோடு இணைந்து இதைப் பற்றிப் பேசின. இறுதியில் மலையகக் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் விலகி விட்டன. 13ஐ அப்படியே ஏற்றுக் கொள்வதில் இவர்களுக்குப் பிரச்சினை. அதனால் தமிழ்க்கட்சிகளில் ஒரு பகுதியினரே கையெழுத்திட்டு இந்தக் கடிதத்தை மோடிக்கு அனுப்பி வைத்தனர்.

இதேவேளை இந்தப் 13 தவறானது. இது தமிழர்களுடைய அரசியலுக்கும் உரிமைக்கும் வைக்கப்பட்ட சவப்பெட்டி படுகுழி என்கின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இதை எதிர்த்து அவருடைய கட்சியான மையே முழுதாக விலை கொடுத்தனர்.

அதை விடவா கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 13 ஐயும் மாகாணசபையையும் அம்பலப்படுத்தப் போகிறார்? புலிகளின் வழியில் தாமும் 13 ஐம் மாகாணசபையையும் நிராகரிப்பதாக இருந்தால் ஒரு வகையில் அது ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியது. புலிகளின் அரசியற் தொடர்ச்சியை காங்கிரஸ் கட்சியும் தொடர விரும்புகிறது என்று ஏற்றுக்கொள்ளலாம்.





ஆனால் அதை புலிகளைப் போல மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாமல் செய்ய வேணும். அதுவே நியாயமானது. இது அப்படியல்ல. மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவும் வேணும். அதிகாரத்தில் இருக்கவும் வேணும். அது பயனற்றது என்று சொல்லவும் வேணும். இதைக் கேட்கும் போது சிரிப்பும் கோபமும் வராமல் என்ன செய்யும்?

ருந்த தமிழ்த்தரப்பின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பயன்படுத்தி பிரேமதாச மாகாணசபை முறைமையை வலுவிழக்கச் செய்ய முற்பட்டார்.

இதனால் உண்டான நெருக்கடிகளால் வடக்குக் கிழக்கு இணைந்த மாகாணசபையின் முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாள் பிரேமதாச அரசாங்கத்தைக் கண்டித்து தமிழீழப் பிரகடனத்தைச் செய்து விட்டு வெளியேறினார். அப்படி அவர் வெளியேறு வதற்கான சூழலை பிரேமதாச அரசும் புலிகளும் இணைந்த அன்று உருவாக்கிமிருந்தனர்.

அன்று 13 ஐயும் மாகாணசபை முறைமையையும் இலங்கை இந்திய உடன்படிக்கையையும் தீவிரமாக எதிர்த்த இன்னொரு முக்கியமான தரப்புஜே.வி.பி. இடையில் இணைந்த மாகாணசபையை உடைக்க வேண்டும் என்று அது உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அதை உடைத்தும் விட்டது. இன்னும் அது மாகாண சபைக்கும் 13க்கும் இலங்கை இந்திய உடன்படிக்கைக்கும் எதிராகவே நிற்கிறது.

சரி மாகாணசபை முறைமை திருப்தியானதல்ல என்றால் பதிலாக எந்த வகையான ஏற்பாட்டை நீங்கள் முன் வைப்பீர்கள் என்றால் அதற்கு ஜே.வி.பியிடமும் சரியான பதில் இல்லை.




ஏனைய சிங்களத்தரப்புகளிடத்திலும் உரியவிடையில்லை. இருந்தாலும் 13 அவர்களுக்கு ஒரு தீராத பிரச்சனையாகவே தோன்றுகிறது. அரசாங்கத்துக்கும் 13இல் திருப்தியில்லை. முஸ்லிம் கட்சிகளுக்கும் வடக்குக் கிழக்கு இணைப்பு உட்பட 13இல் கட்டப் படும் விடயங்கள் தொடர்பாக முழுமையான உடன்பாடில்லை. இப்படியான குழப்பங்கள் நிறைந்த சூழலில் தான் 13 பற்றிய பேச்சுகள் தீவிரம் பெற்றுள்ளன. இப்பொழுது 13 நடைமுறைப்படுத்தப்படுமா? இல்லாதொழிக்கப்படுமா என்ற கேள்விகள் எழுகின்றன.

13பற்றி இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு என்ன? தமிழ்க் கட்சிகளில் சில மட்டும் 13ஐ வலியுறுத்துவதால் ஏதாவது பயன் கிட்டுமா? ஈ.பி.டி.பி உள்பட அரசாங்கத்தை ஆதரிக்கின்ற சில தரப்புகளும் 13ஐ வரவேற்கின்றன.

அப்படியென்றால் அது பலப்படுத்தப் படுமா? தனியே தமிழ்த்தரப்பின் ஆதரவுடன் வடக்குக் கிழக்கில் மட்டும் 13ம் மாகாண சபைக்கான அதிகாரப் பகிர்வும் நடக்குமா? அது சாத்தியமாகுமா? முஸ்லிம் கட்சிகள் மட்டுமல்ல கிழக்கை மையப்படுத்தி இயங்கும் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் உட்பட வேறு சில தரப்புகளும் வடக்குக் கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை.

அப்படியென்றால் 13இன் பெறுமதி என்ன? 13ஐ வலியுறுத்தும் தமிழ்க் கட்சிகளின் கடிதத்துக்கு மதிப்பென்ன? இப்படிச் சிக்கலானதொரு நிலையில் இலங்கை இந்திய உடன்படிக்கை 13 ஆவது திருத்தம் மாகாண சபைகளின் அதிகாரம், வடக்குக் கிழக்கு



கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
கருணாகரன்

இணைப்புஎல்லாம் எப்படியாகப் போகிறது? இதற்குள் பழைய முறையிலா புதிய முறையிலா மாகாண சபைகளுக்கான தேர்தல் நடக்கும் என்ற வாதங்களும் நடந்து கொண்டிருக்கின்றன.

தேர்தலே நடக்குமா என்பது இன்னொரு கேள்வி. எல்லாவற்றையும் விட 13 சோதனைக்குள்ளாகிறது. எல்லோரையும் 13 சோதனை செய்கிறது. ஆனால் எல்லா எண்ணுக்கும் உரிய தனித்துவமும் சிறப்பும் 13க்கும் உண்டு. இப்பொழுது அது தான் (13) அதிவிசேசமாக இருக்கிறது. எல்லோரையும் ஆட்டிப்படைக்கிறது.

இதேவேளை இலங்கையின் மாகாண சபை முறைமையைப் பற்றி இந்திய இலங்கை ஒப்பந்தம் 13 ஆவது திருத்தமும் மாகாண அரசுகளும் என்ற தலைப்பில் முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாண முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள் சிறப்பான தொரு விளக்கத்தை

Twiter Spece இல் கடந்த வாரம் அளித்துக் கொண்டிருந்தார். இன்று 13 ஆவது திருத்தம் பற்றியும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தி யாவை வலியுறுத்துவது பற்றியுமான சிரத்தை அதிகரித்துள்ள சூழலில் வரதராஜப்பெருமாளின் விளக்கம் தெளிவுபடுத்தல் முக்கியமானது.

நன்றி — அரங்கம் இணையம்



# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வு க்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

05 பெப்ரவரி 2022 முதல் 11 பெப்ரவரி 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ஆறுமுகம் நாகநாதர்

புங்குடுதீவு 10ம் வட்டாரம் பொன்னாந்தோட்டத்தைச் சேர்ந்த அமரர் உயர்திரு நாகநாதர் ஆறுமுகம் (தம்பிப்பிள்ளை) அவர்களது 36வது ஆண்டு நினைவு நாள் 07 பெப்ரவரி 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகநாதர் ஆறுமுகம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### Dr கந்தையா இராஜதுரை

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த டாக்டர் கந்தையா இராஜதுரை அவர்களது 24வது ஆன்டு நினைவு நாள் 11 பெப்ரவரி 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். டாக்டர் கந்தையா இராஜதுரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பொன்னையா தம்பையா

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகக் கொண்டிருந்த திரு பொன்னையா தம்பையா அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 09 பெப்ரவரி 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பொன்னையா தம்பையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திரு சின்னப்பு கோபாலபிள்ளை

அனலைதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு சின்னப்பு கோபாலபிள்ளை அவர்களது 31ம் நாள் நினைவு நாள் 15 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சின்னப்பு கோபாலபிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இன்பமணி ராசா

யாழ்.கல்வியங்காட்டைச் சேர்ந்த திருமதி இன்பமணி ராசா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாள் 11 பெப்ரவரி 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது பேத்தி செல்வி வைஷ்ணவி ஜெயகுமார் அவர்கள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இன்பமணி ராசா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தவேந்திரராணி தேவரத்தினம்

யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவுநாள் 08 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக் கின்றார்கள். "நல்லதை நினை நடப்பது நடக்கும்"

## 17வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னப்பு பரமநாதன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு சின்னப்பு பரமநாதன் அவர்களது 17வது ஆண்டு நினைவு நாள் 05 பெப்ரவரி 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 06 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னப்பு பரமநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



05 பெப்ரவரி 2022 சனிக்கிழமை மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருக்கும் திரு குருசாமி சிவசோதி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு குருசாமி சிவசோதி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



05 பெப்ரவரி 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சாந்தகுமார் ஜெயராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அகத்தியனின் 23வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் அகத்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



05 பெப்ரவரி 2022 சனிக்கிழமை லண்டனில் வசிக்கும் திரு திருமதி சங்கீபன் யசோதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஹரிகேஷ் சங்கீபனின் 4வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஹலிகேஷ் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



05 பெப்ரவரி 2022 சனிக்கிழமை லண்டனில் வசிக்கும் திரு திருமதி சங்கீபன் யசோதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஹரிகேஷ் சங்கீபனின் 4வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஹலிகேஷ் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



05 பெப்ரவரி 2022 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு சின்னப்பு பரமநாதன் அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 06 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



06 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமை நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு கனகசபை மருதப்பு அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



07 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி லில்லிதிரேஷ் மயில்வாகனம் அவர்களது 81வது பிறந்த நாள் நினைவாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்த நாள் நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



07 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரம் பொன்னாந்தோட்டத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை என்று அன்பாக அழைக்கப்படும் திரு ஆறுமுகம் நாகநாதர் அவர்களது 36வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



07 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஆனந்தராஜா லோஜினி தம்பதிகளின் செல்வப்புதல்வி வையோமி ஆனந்தராஜாவின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி வையோமி தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



07 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சுப்பிரமணியம் சரோஜினி இணையர்களது 53வது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் தங்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



07 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சுப்பிரமணியம் சரோஜினி இணையர்களது 53வது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் தங்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




07 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி லீலா சுகுமார் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



07 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி லீலா சுகுமார் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்


07 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி லீலா சுகுமார் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



08 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமை யாழ்.கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களது 9வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# Targeted financial support programs available now

For eligible Canadians or business owners who continue to struggle due to COVID-19:

- Hardest-Hit Business Recovery Program
- Tourism and Hospitality Recovery Program
- Canada Recovery Hiring Program
- Canada Worker Lockdown Benefit




canada.ca/coronavirus

Government of Canada Gouvernement du Canada

Canada



TAX CENTRIC

2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு
அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்


Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph



- ❑ **Personal Tax**
- ❑ **Corporate Tax**
- ❑ **Book Keeping & Accounting**
- ❑ **Payroll Services**
- ❑ **GST/HST Filing**
- ❑ **Corporate Services**
- ❑ **Business Startup**
- ❑ **Financial Planning**

## Gayatiri Thavan

Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**



Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Insurance Advisor
Life and Living Benefits

RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
Scarborough, ON M1V 1V2
Mahindan.mailvaganam@rbc.com

Cell: 416-262-4973

## Insurance can seems confusing It doesn't have to be.

*We'll help you get it.*

**Talk to an RBC Insurance advisor in your neighbourhood today**

*We take the time to make choosing the right insurance plan less confusing for you. Whether it's life, health, car, home, travel or wealth, we'll help you to choose the right coverage to protect what's important to you.*

**உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் பெரும்பாலும் உங்களுக்கு உதவ முடியும்!**

RBC Insurance®

® Life | Health | Auto | Home | Travel | Wealth

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




08 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமை Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




09 பெப்ரவரி 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சுமதி ராஜ்குமார் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சுமதி ராஜ்குமார் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




09 பெப்ரவரி 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிரபுராஜ் அனித்தா தம்பதிகளின் செல்வப்புதல்வி இரா பிரபுராஜின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி இரா பிரபுராஜ் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




09 பெப்ரவரி 2022 புதன்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பையா பொன்னையா அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 ஜனவரி 2022 யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு ஐயா ஜோசப் அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 10 பெப்ரவரி 2022 வியாழக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 பெப்ரவரி 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கோகுலனின் 16வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கோகுலன் அவர்கள் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




11 பெப்ரவரி 2022வெள்ளிக்கிழமை தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த Dr கந்தையா இராஜதுரை அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 பெப்ரவரி 2022வெள்ளிக்கிழமை யாழ் கல்வியங்காட்டைச் சேர்ந்த திருமதி இன்பமணி இராசா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது பேத்தி செல்வி வைஷ்ணவி ஜெயகுமார் அவர்கள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.




04 பெப்ரவரி 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி மகாலிங்கம் பவானி இணையர்களது 50 திருமண நன்நாள் ஆகும். அன்றையதினம் இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

## இனிய பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி ரஷ்மி சந்திரகுமார்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி சந்திரகுமார் சுமதி தம்பதிகளின் செல்வப் புதல்வி ரஷ்மி சந்திரகுமாரின் பிறந்த நன்நாள் 13 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றைய நாளில் செல்வி ரஷ்மியும் அவரது பெற்றோர்களும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழவுள்ளார்கள். பிறந்த நன்நாள் காணும் செல்வி ரஷ்மி நோய் நொடியின்றி சீரும் சிறப்புடன் பார் போற்றும் பைந்தமிழ் மகளாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

## 4வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் ஹரிகேஷ் சங்கீபன்

லண்டனில் வசிக்கும் திரு,திருமதி சங்கீபன் யசோதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஹரிகேஷ் சங்கீபனின் நான்காவது பிறந்த நன்நாள் 05 பெப்ரவரி 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் செல்வன் ஹரிகேசும் அவரது பெற்றோர்களும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை நான்கு காணும் செல்வன் ஹரிகேஷ் நோய் நொடியின்றி சீரும் சிறப்புடன் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி இரா பிரபுராஜ்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி பிரபுராஜ் அனித்தா தம்பதிகளின் செல்வப் புதல்வி இரா பிரபுராஜின் முதலாவது பிறந்த நன்நாள் 09 பெப்ரவரி 2022 புதன் கிழமையாகும். அன்றைய நாளில் செல்வி இராவும் அவரது பெற்றோர்களும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழவுள்ளார்கள். அகவை ஒன்று காணும் செல்வி இரா நொடியின்றி சீரும் சிறப்புடன் பார் போற்றும் பைந்தமிழ் மகளாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!



# கிட்டு பூங்கா:- பிரகடனமும் அதன் பின்னும்




கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -


இந்தியாவுக்கு ஒரு கூட்டுக் கோரிக்கையை அனுப்பும் நோக்கத்தோடு ஆறு கட்சிகள் ஒன்றாக உழைத்துக் கொண்டிருந்த ஒரு கால கட்டத்தில் இந்தியாவை நோக்கி ஒரு கொழுக்கியைப் போட வேண்டியதன் அவசியம் குறித்து நான் எழுதியும் பேசியும் வந்தேன். ஆனால் அக்கொழுக்கி 13 ஆக இருக்க வேண்டுமா என்ற கேள்வியையும் கேட்டிருந்தேன். அந்நாட்களில் எனது நண்பர் ஒருவர் அவர் ஒரு சிவில் சமூக செயற்பாட்டாளர். அதோடு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர். என்னிடம் கேட்டார் இந்தியாவை நோக்கி ஒரு கொழுக்கியைப் போடும் பலம் இந்த ஆறு கட்சிகளிடமும் இருக்கிறதா? என்று.

நான் அவருக்குச் சொன்னேன் இல்லை. இப்போதுள்ள நிலைமைகளின்படி அவர்களுக்கு அந்தப் பலம் இல்லை. ஆனால் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கும் அந்தப் பலம் இல்லை என்று. ஏனெனில் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்ப்பரப்பில் செயலுக்கு போகாத பிரகடனங்களும் தீர்மானங்களும். வாக்குறுதிகளும் மக்களாணைகளும் தான் உண்டு. எந்த ஒரு தமிழ் தேசியக் கட்சியும் தனது இறுதி இலட்சியத்தை முன்வைத்து தொடர்ச்சியாக போராடவில்லை, ரிஸ்க் எடுக்கவில்லை. தெட்டந் தெட்டமான மக்கள் எழுச்சிகள், சிறிய கவனயீர்ப்பு போராட்டங்கள் போன்றவற்றுக்கும் அப்பால் தொடர்ச்சியாக மக்கள் போராட்டங்களை ஒழுங்கமைக்கும் சக்தி தங்களுக்கு இருப்பதாக இதுவரையிலும் எந்த ஒரு தமிழ் கட்சியும் நிரூபித்திருக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் தான் இப்பொழுது தமிழ்த் தேசிய அரசியல் பரப்பானது இந்தியாவுக்கு கடிதம் அனுப்பும் விவகாரத்தில் இரண்டுபட்டு நிற்கிறது. பெரும்பான்மையான கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டுக் கோரிக்கையை இந்தியாவை நோக்கி வைத்திருக்கின்றன. அதேசமயம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது அந்த ஒருங்கிணைப்புக்குள் இணைய மறுத்ததோடு மேற்படி ஆறு கட்சிகளுக்கும் எதிராக ஓர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் கிட்டு பூங்காவில் நிகழ்த்தியிருக்கிறது.

கிட்டு பூங்காவில் நடந்த ஆர்ப்பாட்டமானது இந்தியாவுக்கும் ஆறு கட்சிகளுக்கும் உள்ள பொறுப்பை அதிகப்படுத்தியிருக்கிறது எனலாம். அவ்வாறான ஆர்ப்பாட்டமொன்றை ஒழுங்குபடுத்தும் சக்தி தனக்கு உண்டு என்பதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிரூபித்திருக்கிறது. அதை அவர்கள் இப்பொழுது தான் நிரூபிக்க வேண்டும் என்று இல்லை. ஏற்கனவே கடந்த 10 ஆண்டுகளில் நடந்த எழுக தமிழ் போன்ற போராட்டங்களில் மக்களை தெருவுக்கு கொண்டு வந்ததில் அக்கட்சிக்கும் முக்கிய பங்கு உண்டு. ஆனால் ஒரு நாள் எழுச்சி மட்டும் போதாது. டெல்லியில் வேளாண் மசோதாவுக்கு எதிராக மாதக்கணக்கில் விவசாயிகள் போராடியதைப் போல தொடர்ச்சியாகப் போராடினால்தான் இந்தியாவும் திரும்பிப் பார்க்கும் இலங்கையும் திரும்பிப் பார்க்கும்ஏன் மக்கள் மத்தியிலும்கூட ஒரு விழிப்பு ஏற்படும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இப்பொழுது பதின்மூன்றாவது திருத்தம் வேண்டுமா வேண்டாமா என்பதல்ல பிரச்சினை.எரிவாயு கிடைக்குமா கிடைக்குமா? யோக்கெட் இல்லாமல் பால்மா கிடைக்குமா? பொருட்களின் விலை குறையுமா? என்பதே அவர்களுடைய பிரச்சனை. இந்த பிரச்சினைகளுக்குள் அவர்களுடைய கவனத்தை ஓர் அரசியல் இலக்கின் மீது குவிப்பது என்பது கட்சிகளின் உழைப்பில்தான் தங்கியிருக்கிறது. கடந்த 12 ஆண்டுகளாக எந்த ஒரு கட்சியும் அவ்வாறு தொடர்ச்சியாக உழைக்கவில்லை.

எனது கடந்த வாரக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது போல பொங்கலுக்கு முதல் நாள் முற்றவெளியில் நடந்த ஒரு கவனயீர்ப்பு பொங்கலில் எந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையும் காணமுடியவில்லை. திரளான மக்களையும் காணவில்லை. சுதந்திர தினத்தன்று நடந்த எழுச்சிகளும் ஒரு நாள் போராட்டங்களே. ஒருநாள் மக்கள் எழுச்சிகளை தொடர்ச்சியான போராட்டங்களாக மாற்றும் போது தான் ஓர் அரசியல் இயக்கம் அல்லது கட்சி அதன் இறுதி வெற்றியை பெறமுடியும். இது எல்லா தமிழ் தேசிய கட்சிகளுக்கும் பொருந்தும்.

கடந்த 12 ஆண்டுகளில் தமிழ்தேசியப் பரப்பில் அதிகம் புவிசார் அரசியல் குறித்தும் பூகோள அரசியலை குறித்தும் பேசி வந்த கட்சி முன்னணி தான். எனக்கு ஆண்டு சரியாக ஞாபகம் இல்லை.2013 என்று நினைக்கிறேன். யாழ்,மறைக்கல்வி நிலையத்தில் நடந்த ஒரு சந்திப்புக்குப் பின் கஜேந்திர குமாரிடம் நான் கேட்டேன் புவிசார் அரசியல் எப்படி கையாளப் போகிறீர்கள் அதற்கான வழி வரைபடம் என்ன என்று. அவர் சொன்னார் அதற்குரிய மக்கள் ஆணையைப் பெற்று வெளி நாடுகளை அணுக வேண்டும் என்று. கூட்டமைப்பிலிருந்து விலகி வந்த பின் கடந்த பத்தாண்டுகளில் அக்கட்சி இரண்டு நாடாளுமன்ற ஆசனங்கள் வரையிலும் முன்னேறி இருக்கிறது. எனினும் அந்த வெற்றியைக் கூட கொண்டாட முடியாதபடி மணிவண்ணனின் பிரிவு அக்கட்சிக்கு சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அந்த இரண்டு ஆசனங்கள் அக்கட்சி முன்வைக்கும் வெளியுறவு இலக்குகளை நோக்கி பேரம் பேசுவதற்கு போதுமானவை அல்ல. அண்மையில் நடந்த ஒரு கிளப் ஹவுஸ் சந்திப்பில் கஜேந்திரகுமாரிடம் அதுபற்றி கேட்கப்பட்டிருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக புவிசார் அரசியல் குறித்து அதிகம் பேசி வந்த நீங்கள் இது விடயத்தில் எதை சாதித்திருக்கிறீர்கள் என்ற தொனிப்பட்ட கேட்கப்பட்ட பொழுது அவ்வாறு புவிசார் மற்றும் பூகோள அரசியலை கையாள்வதற்கு இப்போதுள்ள இரண்டு நாடாளுமன்ற ஆசனங்கள் போதாது என்ற தொனிப்பட பதில் கூறியிருக்கிறார்.

அதில் உண்மை உண்டு. அதைத்தான் நான் தொடர்ச்சியாக கூறி வருகிறேன். வெளி விவகாரத்தை கையாள்வது என்பது முதலில் ஒரு குறிப்பிட்ட அமைப்பு அல்லது கட்சி தன் மக்கள் மத்தியில் ஒரு “பவர் சோர்ஸ்” ஆக பல மையமாக தன்னை ஸ்தாபிப்பதில் இருந்தே தொடங்குகிறது. வெளிவிவகாரம் எனப்படுவது ஒரு பல மையம் ஏனைய பல மையங்களோடு வைத்துக் கொள்ளும் இடையூடாட்டம் தான். இந்த அடிப்படையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது தனது வெளியுறவு இலக்குகளை நோக்கி உழைப்பதற்கு முதலில் தனது பலத்தை அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. ஒருநாள் எழுச்சிப் போராட்டங்கள் அந்தப் பாதையில் அவர்களுக்கு பலம் சேர்க்கலாம். ஆனால் அவை மட்டும் போதாது. அதற்கும் (20ம் பக்கம் பார்க்க)

## ஒளிவிடும் 24வது ஆண்டில்



மலர்வு
07.06.1932

உதிர்வு
11.02.1998

**அமரர் உயர்திரு குட்டித்தம்பி சண்முகலிங்கம்**
**திதி:- 17 ஜனவரி 2022**

அன்புள்ள அப்பா!
நீங்கள் மறைந்து போனாலும்
மறையாமல் இருக்கிறது
உங்களின் பாசமும் அன்பும்
வானில் இருக்கும் உங்களிடம்
வேண்டுகின்றோம் வாழ்த்துக்கள்
உங்களின் நினைவுப் பாதையில்
எங்களின் கண்ணீர் மலர்கள்
என்றும் உங்கள் நினைவுகளுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

EELANADU 11 Feb 2022 ஈழநாடு

# போர்களை புதிய யுகத்துக்கு இட்டுச் செல்லும் ட்ரோன்கள்! இராணுவத்திற்கு பயங்கர சவால்!

- ஜொனாதன் மார்கஸ் -

ஆளில்லா ட்ரோன் விமானங்கள் ஒரு காலத்தில் வல்லரசுகளின் கைகளில் இருந்தன. ஆனால் அந்த நிலை தற்போது இல்லை. கிளர்ச்சியாளர்கள் மற்றும் சிறிய நாடுகளில் அதன் பயன்பாடு ஏற்கெனவே போரின் தன்மையை மாற்றுகிறது என எழுதுகிறார் ஜொனாதன் மார்கஸ்.

பெரும்பாலும் ராணுவ வரலாற்றில் ஒரு ஆயுத அமைப்பு ஒரு முழு யுத்த யுகத்தின் அடையாளமாக மாறும். மத்திய காலத்தில் அஜின்கோர்ட்டில் ஆங்கிலேய வில்லாளர்கள் பயன்படுத்திய நீளமான வில் அல்லது இரண்டாம் உலகப் போரின் தரைப் போரில் பயன்படுத்தப்பட்ட திறன் மிக்க கவசப் படைக்கலன்களை இதற்கு எடுத்துக் காட்டாக சொல்லலாம்.

MQ-1 பிரிடேட்டர் ஆளில்லா வான்வழி வாகனங்கள் (யுஏவி) ஆப்கானிஸ்தான் ஈராக் மற்றும் பிற இடங்களில் அமெரிக்கா நடத்திய கிளர்ச்சி எதிர்ப்புப் போர் காலகட்டத்தின் ஆயுதச் சின்னமாக மாறின.

இது சோவியத் அமெரிக்கப் பனிப்போர் காலம் முடிவடைந்த பின்னர், அமெரிக்கா தனித்து நின்று ஆதிக்கம் செலுத்தும் உலகளாவிய வல்லரசாக இருந்த போது அது "ஒற்றை வல்லரசு" என அழைக்கப்பட்டது போல இருந்தது.

பிரிடேட்டர் வாகனங்கள் முதலில் வான்வழி உளவு நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட ஹெல்ஃபயர் ஏவுகணைகளுடன் ஆயுதம் ஏந்தியபோது தான் ட்ரோன்கள் உயர்ந்த நிலையை அடைந்தன.

அதற்கு அடுத்து வந்த ரீப்பர் ட்ரோன்கள் குறிப்பாக வேட்டையாடும் கொலை ஆயுதமாக வடிவமைக்கப்பட்டன. இவை அதன் முன்னோடி ஆயுதங்களை விட அதிக வரம்பைக் கொண்டவை, அதிக எடையுள்ள வெடி மருந்துகளை அதில் எடுத்துச் செல்லக் கூடியவை. அதன் பெயரே அதன் நோக்கத்தை வெளிப்படையாகக் கோடிட்டுக் காட்டுகிறது.

வாஷிங்டனின் எதிரிகளை அவர்கள் எதிர்பார்க்கும் போதெல்லாம் எங்கு வேண்டுமானாலும் குறி வைக்கும் திறன் கொண்ட துல்லியமான கொலை ஆயுதங்களாக இவை இருக்க முடியும். ஜனவரி 2020 இல் பாக்தாத் விமான நிலையத்திற்கு வெளியே ஈரானிய ஜெனரல் காசிம் சுலைமானியைக் கொல்ல ரீப்பர் ட்ரோன் பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படுகிறது.

ஒரு குறுகிய காலத்திற்கு, பெரும்பாலும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் (அதன் சொந்த குறிப்பிடத்தக்க ட்ரோன் தொழில்துறையுடன்) இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது. இதனை ஆளில்லா ட்ரோன் விமானங்களின் ஆரம்ப காலகட்டம் எனலாம். ஆனால் நிலைமை இப்போது ஆச்சர்யப்படத்தக்க வகையில் மாறி விட்டது.

ட்ரோன்களை அடிப்படையாக கொண்டுள்ள போர்முறையின் புதிய சகாப்தம் ஏற்கனவே இன்னும் பலரை உள்ளடக்கியதாக வந்து விட்டது. யுஏவிக்களின் பயன்பாடு, பயங்கரவாத எதிர்ப்பு அல்லது கிளர்ச்சி எதிர்ப்புப் போரில் இருந்து முழு அளவிலான வழக்கமான போராக மாறியுள்ளது. உண்மையில் ட்ரோன் அடிப்படையிலான போர்களின் புதிய மூன்றாம் தலைமுறை தொழில்நுட்பம் மிகவும் அதி நவீனமாகி செயற்கை நுண்ணறிவுடன் இணைக்கப்பட்டுள்ளது. முன் முனையில் கேமரா கீழே ஒரு யூனிட்டில்



கேமரா மற்றும் சென்சார்கள்

மேம்பட்ட நிலைப்புத்தன்மைக்கு ஏ — வடிவ பின்பகுதி

ஆயுதங்கள், ஜிபிஎஸ் அல்லது லேசர் வழிகாட்டும் ஏவுகணைகள் மற்றும் குண்டுகள்

நீளம்ஹ 10.97மீட்டர் (36 அடி)

உயரம்ஹ 3.66 மீட்டர் (12 அடி)

இறக்கைகள்ஹ 21.12 மீட்டர் (69 அடி 3½ இன்ச்)

அதிகபட்ச வேகம்ஹ 463 கி.மீ.ஃமணி நேரம் (287 மீ — மணிநேரம்)

டி.பி.எல்.எப். எனப்படும் டீக்ரே மக்கள் விடுதலை முன்னணி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களை எதிர்கொள்ளும் வகையில் எத்தியோப்பிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வலுப்படுத்த உதவும் சமீபத்திய மோதல்களில் ட்ரோன் தாக்குதல்கள் முக்கிய பங்கு வகித்தன.

துருக்கி மற்றும் ஈரானிடம் இருந்து எத்தியோப்பிய அரசு ஆயுதம் தாங்கிய ஆளில்லா விமானங்களை வாங்கியுள்ளது. இது ஐக்கிய அரபு அமீரகம் வழியாக சீன விங் லூங் ஐஐ யுஏவிக்களுக்களைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிபியாவின் ஆவேசமான உள்நாட்டுப் போரில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தனது கூட்டாளியான ஜெனரல் கலீஃபா ஹப்தாருக்கு சீனாவால் உருவாக்கப்பட்ட ட்ரோன்களை வழங்கியது.

பல சந்தர்ப்பங்களில் ஆயுதமேந்திய ட்ரோன்கள் ஒரு தீர்க்கமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன, இது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட லிபியாவின் திரிபோலி அரசாங்கத்தின் உயிர் பிழைத்தலுக்கு பங்களித்தது மற்றும் கடந்த ஆண்டு நாகோர்னோ — கராபாக் மோதலில் துருக்கி சப்ளை செய்த ட்ரோன்கள் அஜர்பைஜானின் படைகள் ஆர்மீனியாவில் இருந்து சர்ச்சைக்குரிய அந்நிய எல்லைக்குட்பட்ட கட்டுப்பாட்டைக் கைப்பற்றுவதற்கு ஒரு சக்தி வாய்ந்த காரணியாக இருந்தது.

ட்ரோன் தாக்குதல்கள் பெரும்பாலும் சிக்கலான சட்ட மற்றும் தார்மீக சங்கடங்களை எழுப்புகின்றன. ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்கள் மூலம் அவற்றின் பயன்பாடு ஏதேனும் ஒரு வகையில் கட்டுப்படுத்தப்படலாம் என்ற நம்பிக்கை மாயை என நிரூபிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா தனது முன்னணி தொழில்நுட்பத்தை அதன் நெருங்கிய நட்பு நாடுகளைத் தவிர வேறு எவருக்கும் ஏற்றுமதி செய்ய தயக்கம் காட்டினாலும் மற்றவர்கள் அத்தகைய வேறுபாட்டைக் காட்டவில்லை. உண்மையில் யுஏவிக்களின் பரவல் இடைவிடாமல் தெரிகிறது. 100க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் அரசு சாரா குழுக்களிடம் ட்ரோன்கள் உள்ளன. நியூ அமெரிக்கன் செக்யூரிட்டிக்கான மையத்தின் ஆய்வு இயக்குனர் பால் ஷார்ரே கூறுவது போல், இதன் பெருக்கம் தொடரும் என்று தெரிகிறது.

சீனா உலகளவில் ஆயுதம் ஏந்திய ஆளில்லா விமானங்களின் ஏற்றுமதியில் முன்னணியில் உள்ளது. ஆனால் ட்ரோன்கள் முன்னணி ராணுவ சக்திகளால் மட்டுமே பயன்படுத்தத்தக்கவை அல்ல. ஈரான் மற்றும் துருக்கி போன்ற இடைநிலை சக்திகள் ட்ரோன் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றன மற்றும் வெளிநாடுகளில் அவற்றை விற்பனை செய்கின்றன."

வணிக ட்ரோன் தொழில்நுட்பம் மிகவும் பரவலாகக் கிடைக்கிறது, சில நூறு டாலர்களுக்கு தாக்கவல்ல ட்ரோனை எவரும் உருவாக்க முடியும், மேலும் சில பயங்கரவாத குழுக்களிடமும் அவை உள்ளன" என அவர் வாதிடுகிறார்.

யுஏவியின் தீர்க்கமான தாக்கம் ஆச்சரியமல்ல என அவர் மேலும் கூறுகிறார். ஒரு நாட்டுக்கு அவை மலிவான விலையில் கிடைக்கின்றன.

"போர் விமானங்களை வாங்க முடியாத அரசுகள் மற்றும் அரசு சாரா குழுக்கள் ட்ரோன்களை வாங்கலாம், மேலும் ட்ரோன்கள் போர் விமானங்களைப் போல திறன் கொண்டவை அல்ல என்றாலும் அவை அரசு சாரா குழுக்களுக்கு கொஞ்சம் விமான சக்தியை வழங்குகின்றன. உயர் — வரையறை கண்காணிப்பு மற்றும் துல்லியமான தாக்குதலை செயல்படுத்தும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களுடன் இணைந்து, ட்ரோன்கள் தரைப்படைகளுக்கு மிகவும் ஆபத்தானவையாக உள்ளன." என்றார்.

ஆனால் பிராந்திய மோதல்கள் மற்றும் உள்நாட்டுப் போர்களில் யுஏவிக்களின் பயன்பாடு எதிர்காலப் போரில் ட்ரோனின் மதிப்பிற்கு ஒரு சுட்டியை மட்டுமே வழங்குகிறது.

அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் கிளர்ச்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் கவனம் செலுத்திய நிலையில் ரஷ்யா தனது பரந்த போரில் ட்ரோன்களை இணைப்பதற்கான சோதனைக் களமாக சிரியாவில் அதன் ஈடுபாட்டைப் பயன்படுத்தியது. சிரியாவில் உள்ள ரஷ்யாவின் ட்ரோன் கப்பற்படை முக்கிய உளவுத்துறை கண்காணிப்பு மற்றும் உளவு (ISR) பணிகளை நடத்தியது, அடையாளம் காணப்பட்ட இலக்குகளை ரஷ்ய பீரங்கிகள், பல ஏவுகணை ராக்கெட் அமைப்புகள் மற்றும் விமானங்களுடன் நிகழ் நேரத்தில் தொடர்ந்து ட்ரோன் கண்காணிப்பு மூலம் இணைக்கிறது," என்கிறார், கடற்படை பகுப்பாய்வு மையத்தில் ரஷ்யா ஆய்வுகள் திட்டத்தின் உறுப்பினர் சாமுவேல் பெண்டெட்.

படைத்தளபதிகளிடம் முன்பு இல்லாத வகையில் படைகளுக்கு யுஏவி செயல்படுத்தப்பட்ட போர்க்களத்தின் 24 மணி நேர சூழலை வழங்குவதன் மூலம் இந்த கருத்து இப்போது ரஷ்ய இராணுவம் இன்றும் எதிர்காலத்திலும் எவ்வாறு சண்டையிடுகிறது என்பதை மறுவரையறை செய்கிறது" என்றார்.

ரஷ்ய மறுப்புகளுக்கு மத்தியிலும் யுக்ரேனில் நடைபெறும் சண்டை வழக்கமான ரஷ்ய பணியாளர்களை ஈடுபடுத்தியது, யுஏவிக்களை அதன் திட்டமிட்ட பயன்பாடு பற்றிய மதிப்பு மிக்க நுண்ணறிவை வழங்கியுள்ளது.

கிழக்கு யுக்ரேனில் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட பல வகையான ஆளில்லா விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. பெண்டெட் கூறுகையில் உளவு தகவல்கள் சேகரிப்பு மற்றும் உளவு பார்ப்பது அவற்றின் முக்கிய பணியாக உள்ளது, "ஆனால் மின்னணு போரில் அவற்றுக்கு மற்றொரு முக்கிய பங்கு உள்ளது, அந்த நோக்கத்திற்காக சிறப்பு வகை ரஷ்ய ட்ரோன்கள் பொருத்தப்பட்டுள்ளன" என்றார்.

மின்னணு போர்முறை என்பது எதிரிப் படைகளை அவர்கள் அனுப்பும் சிக்னல்கள் மூலம் கண்டு பிடித்து பின்னர் அவர்களின் தகவல்தொடர்புகளை தடுப்பதன் மூலம் தனிமைப் படுத்தும் கலை.

ரஷ்யா அதன் அதிநவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமெரிக்காவை விட ஒரு தசாப்தம் அல்லது அதற்கும் மேலாக பின்தங்கியிருக்கலாம், ஆனால் ரஷ்ய ஆயுதப்படைகள் தங்கள் படைப்பிரிவுகளில் ட்ரோன்களை ஒருங்கிணைக்கும் வகையில் முன்னோக்கி இருக்கலாம்.

ஆளில்லா ராணுவ விமானங்கள் முழு ரஷ்ய ராணுவப் படை கட்டமைப்பிலும் உள்ளன என பெண்டெட் கூறுகிறார். யுக்ரேனிய கவசப் பிரிவுகள் விரைவாக அடையாளம் காணப்பட்ட நிகழ்வுகளுடன் இந்த அமைப்பின் பயன்பாடு போரில் நிரூபிக்கப்பட்டுள்ளது் இதனால், அவர்களின் தகவல்தொடர்புகள் தடைபட்டன மற்றும் அவர்களுக்கு எதிராக பேரழிவுகரமான பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன." என்றார்.

உண்மையில் யுக்ரேனும் ஆயுதமேந்திய துருக்கிய ட்ரோன்களை பயன்படுத்தலாம். அந்நாடு டான்பாஸ் சண்டையில் ரஷ்ய ஆதரவு (18ம் பக்கம் பார்க்க)

# மீனவர் பிரச்சனையில் புலப்படாத எதிரி

கட்டுரையாளர்:
இந்தியாவில் இருந்து
கேணல் ஹரிஹரன்



இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்தக் கோரி யாழ்ப்பாணத்தில் மீனவர்களின் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. தமிழகத்திலும் இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்களை கைது செய்வது தாக்குவதைத் தடுக்க இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் வெளியுறவு அமைச்சர் ஜெய் சங்கருக்கு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

இரண்டு தமிழர் பகுதிகளிலும் மீனவர்களின் விவகாரம் என்பது இப்போது முக்கியமானதொரு பிரச்சினையாக மாறியிருக்கிறது. இரண்டு பக்கத்திலும் தமிழர்களே மோதிக் கொள்கின்றனர். இரண்டு பக்கங்களிலும் தமிழர்களே உயிர்ப்பலி ஆகிக் கொண்டிருக்கிறார்கள்.

தொப்புள்கொடி உறவுகள் என்று கூறிக் கொள்ளும் தமிழர்கள் தங்களுக்குத் தாங்களே அடிபட்டுக் கொள்வதை இந்தியாவும் வேடிக்கை பார்க்கிறது. இலங்கையும் வேடிக்கை பார்க்கிறது. இந்தப் பிரச்சினையை முறையாக தீர்க்க வேண்டிய பொறுப்பு இரண்டு நாடுகளின் அரசாங்கங்களுக்குமே உள்ளது. இரண்டு அரசுகளும் தமது எல்லைகளை தெளிவாக வரையறை செய்து எல்லை தாண்டும் மீனவர்கள் விவகாரத்தை முறையாக சட்டரீதியாக கையாளுவதற்கு முடிவெடுத்தால் இத்தகைய நிலையை தவிர்க்க முடியும். அவ்வாறானதொரு தீர்வை வழங்குவதற்கு இரண்டு நாடுகளும் தயாராக இல்லாத நிலையில் இந்த விவகாரம் முற்றி நடுக்கடலில் மோதிக் கொள்ளுகின்ற நிலை வரை சென்றிருக்கிறது. இந்திய மீனவர்கள் சட்டவிரோதமான வலைகளைப் பயன்படுத்தி இழுவைப் படகுகளைக் கொண்டு எமது கடல் வளங்களை அழிப்பதாகவும் தமது வலைகள் மற்றும் தொழில் உபகரணங்களை சேதப்படுத்துவதாகவும் இங்குள்ள மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அதேவேளை பாக்கு நீரிணையில் எல்லை கடந்து மீன் பிடிக்கும் இந்திய மீனவர்கள் தங்களுக்கு எல்லை கிடையாது என்றே நினைத்துக் கொள்கிறார்கள். மீன் உள்ள இடத்தில் தான் மீன் பிடிக்க முடியும் என்பது அவர்களின் வாதம். இது சட்டரீதியானதல்ல.

எல்லை தாண்டும் போது இலங்கை கடற்படையினர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் கைது செய்தால் எந்தச் சட்ட நடவடிக்கையும் இன்றி விடுவிக்க வேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். தங்களைத் தாக்கக் கூடாது என்றும் அன்பாக அரவணைக்க வேண்டும் என்றும் நினைக்கிறார்கள்.

இந்திய மீனவர்களின் இந்த எதிர்பார்ப்பு எந்த நாட்டின் சட்டத்துக்கும் ஏற்புடையதாக இருக்க முடியாது. அதேவேளை இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளைத் தடை செய்யக் கோரும் இலங்கை மீனவர்கள் தாங்கள் அந்த தொழிலைக் கைவிடத் தயாராக இல்லை என்ற நிலைப்பாட்டில் உள்ளார்கள். அதனால் தான் முல்லைத்தீவு மீனவர்களுடன் இணைந்து சுமந்திரன் சாணக்கியன் ரவிகரன் போன்றவர்கள் சில மாதங்களுக்கு முன்னர் இந்திய மீனவர்களின் ஊடுருவலை தடுக்க கோரி படகுகளில் சென்று நடத்திய போராட்டத்துக்கு யாழ்ப்பாண மீனவர்கள் ஆதரவளிக்கவில்லை. இழுவைப் படகுகளால் தான் கடல் வளம் அழிக்கப்படுகிறதென்றால் அதனை இரண்டு தரப்புகளும் தடை செய்ய வேண்டியது தான் முறை.

பொதுவானதொரு சட்டத்தை அமுல்படுத்தினால் தான் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும். இங்குள்ள மீனவர்கள் சந்தர்ப்பத்துக்கேற்ப போராட்டங்களை முன்னெடுக்கிறார்கள். நிலைப்பாடுகளை எடுத்துக் கொள்கிறார்கள். உதாரணத்துக்கு சீனர்களின் கடல் அட்டைப் பண்ணைகளால் வடக்கில் கடல் வளம் அழிக்கப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு எழு



ந்தது. அதற்கெதிராக போராட்டங்கள் நடத்தப் போவதாக மீனவர் அமைப்புகள் கூறின. அந்தப் பிரச்சினையை சீனத் தூதுவரும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இணைந்து நீர்த்துப் போகச் செய்தனர். அதன் ஒரு கட்டமாகத் தான் சீனத் தூதுவரின் அண்மைய வடக்குப் பயணத்தின் போது மீனவர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

வத்திராயனில் இருந்து கடந்த 28ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்கள் சடலங்களாக கரையொதுங்கினர். அவர்கள் இந்திய மீன்பிடிப்படகினால் மோதி உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடுகின்றனர் மீனவர்கள். இதே போன்றதொரு நிலை மாதகலைச் சேர்ந்த மீனவர் ஒருவருக்கும் ஏற்பட்டது.

படகில் சென்ற மீனவர் இனந்தெரியாத படகு மோதி உயிரிழந்தார். அந்தச் சம்பவத்துக்கு கடற்படைப் படகே காரணம் என்று மாதகல் மீனவர்கள் குற்றம் சாட்டினர். ஆனால் அந்தச் சம்பவத்துக்கு நீதி கோரி யாழ். மாவட்ட மீனவர்கள் பெரியளவில் போராட்டத்தை முன்னெடுத்திருக்கவில்லை. கடற்படைப் படகு மோதியிருந்தால் அதனைக் கண்டு பிடிப்பது கடினமல்ல. கடற்படைப் படகுகளின் பயணப் பாதைகள், தலைமையகத்தில் தெளிவாக பதிவு செய்யப்பட்டிருக்கும். அதனை அடிப்படையாக வைத்து ஜி.பி.எஸ். கருவியின் பதிவுகளைக் கொண்டு முறையான விசாரணைகளை நடத்தினால் யார் அதற்கு காரணம் என்பது தெரிய வந்திருக்கும். ஆனால் அவ்வாறான எந்த நீதி விசாரணையும் இதுவரை முன்னெடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

மிகச் சுலபமாக இந்திய மீன்பிடிப்படகுகள் மீது பழியைப் போட்டு விட்டு கடற்படையினர் தப்பிக்க முனைகின்றனர். இவ்வாறாக மீன்பிடிப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டு மீனவர்கள் இறப்பது தொடர்கதையாகவே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. 1980களில் தொடங்கிய இந்த இரத்த வரலாறு இன்றும் நீடிக்கிறது.

வடக்கு மீனவர்களுக்குத் தான் இந்த நிலை என்றில்லை. இந்திய மீனவர்களுக்கும் அதே கதி தான். அண்மையில் கூட ஒரு மீன்பிடிப் படகு மூழ்கடிக்கப்பட்டு ஒரு இந்திய மீனவர் உயிரிழந்திருந்தார். அதற்கு முன்னர் நான்கு மீனவர்களுடன் ஒரு படகு மூழ்கடிக்கப்பட்டது.

பாக்கு நீரிணை மீன்பிடிச் சர்ச்சைக்கு அப்பால் இவ்வாறான சம்பவங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றுக்கு முறையான விசாரணையும் நடப்பதில்லை. நீதியும் வழங்கப்படுவதில்லை. அதற்குப் பிரதான காரணம் இரண்டு நாடுகளின் அரசாங்கங்களின் அலட்சியம் தான்.


அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்த நீதியமைச்சர் அலி சப்ரியிடம் இந்தப் பிரச்சினை குறித்து ஊடகவியலாளர்கள் வினவிய போது மீனவர்களின் பிரச்சினையை சட்டரீதியாக தீர்த்துக் கொள்ள முடியாது என்றும் இது இரண்டு நாடுகளினதும் இராஜதந்திர விவகாரம் என்றும் குறிப்பிட்டிருந்தார். அதாவது இராஜதந்திர ரீதியான உறவு களைக் கொண்டிருப்பதால் அதில் நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடும் இந்த விவகாரத்தில் நெகிழ்வுப் போக்குடனேயே செயற்பட முடியும் என்பது அவரது நிலைப்பாடு. இலங்கை அரசாங்கம் இந்தியாவின் தயவையும் உதவியையும் எதிர்பார்த்திருக்கிறது. அதனால் மீனவர் பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கத்தினால் இறுக்கமாக முடிவுகளை எடுக்க முடியாதிருக்கிறது.

மீனவர்கள் விவகாரத்தை சட்ட ரீதியாக இறுக்கமாக அணுக முயன்றால் இந்தியா கோபமடையும். அது தமக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று இலங்கை அரசு கருதுகிறது. அது போலவே இந்தியாவும் மீனவர்கள் விவகாரத்தை வைத்து இலங்கைக்கு நெருக்கடிகளை கொடுத்தால் இலங்கை அரசு சீனாவின் பக்கம் சென்று விடுமோ என்று கலங்குகிறது. விடுதலைப் புலிகளின் காலத்தில் இந்திய மீனவர்கள் போராட்டத்துக்கு பெரும் ஒத்துழைப்பை வழங்கினார்கள். அவ்வாறான காலகட்டத்தில் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டனர். அதனை இந்தியா கண்டுகொள்ளவில்லை. காரணம், விடுதலைப் புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்றும் விடுதலைப் புலிகளின் விநியோகச் சங்கிலி அறுக்கப்பட வேண்டும் என்றும் இந்தியா விரும்பியது. இப்போது சீனாவை முன் வைத்து இந்தியா தனது நாட்டு மீனவர்களின் நலன்களை பலியிடுகிறது.

இந்தியாவும் இலங்கையும் இறைமை, பூகோள எல்லை என்பன பற்றி அதிகம் பேசுகின்ற நாடுகள். இந்திய மீனவர்களால் இலங்கையின் இறைமை பூகோள எல்லை மீறப்படுகின்ற போது இலங்கை அரசாங்கம் அதனை கண்டு கொள்ளவில்லை.

அது போலவே இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டு இந்தியாவின் இறைமை மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதை இந்திய மத்திய அரசும் கண்டு கொள்ளவில்லை. இதிலிருந்து இந்தப் பிரச்சினை தீர்க்கப் படுவதை இரண்டு அரசுகளும் விரும்பவில்லை என்றே உணர வேண்டியுள்ளது. பிரச்சினையைத் தீர்க்க இரண்டு அரசுகளும் முற்படாத நிலையில் மீனவர்கள் மோதிக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது. இருதரப்பு மீனவர்களுக்கிடையில் கண்ணுக்குத் தெரியாத ஒரு எதிரி சண்டையை மூட்டி விடுவதாக தோன்றுகிறது. (18ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# தமிழ்நாட்டில் மதவாத அரசியல்?

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் ஒரே கட்டமாக பெப்ரவரி 19ஆம் திகதியன்று நடைபெறுகிறது. இதற்கான கூட்டணிக் கட்சிகளின் பேச்சுவார்த்தை நடைபெற்று நிறைவடைந்திருக்கிறது அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றிருந்த பா.ஜ.க. இந்த முறை தனித்து போட்டியிடுகிறது.

இந்த முடிவு அந்தக் கட்சி தமிழகத்தில் வளர்ச்சி அடைந்திருக்கிறதா? இல்லை இன்னும் நோட்டாவுடன் போட்டியிடுவது தொடர்கிறதா? என்பது தேர்தல் முடிவுக்குப் பின்னர் உறுதியாக தெரிய வரும். ஆனால் இந்த முறை நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் நூறு சதவீத வெற்றியைப் பெற வேண்டிய கட்டாயத்தில் ஆளும் கட்சியான தி.மு.க. இருக்கிறது.

அதே தருணத்தில் அ.தி.மு.க.வின் சுமையாக கருதப்பட்ட பா.ஜ.க.



இந்தமுறை தனித்துப் போட்டியிடுவதால் அ.தி.மு.க.விற்கு கிடைக்க வேண்டிய சிறுபான்மையின வாக்குகள் முழுமையாக கிடைக்கும் என்றும் கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.விற்கு இடம் பெயர்ந்த சிறுபான்மையின வாக்குகள் மீண்டும் அ.தி.மு.க.விற்கு கிடைக்க வாய்ப்பு இருப்பதால் அக்கட்சி அதிக இடங்களை கைப்பற்றக் கூடும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

ஆனால் தேர்தல் விடயங்களில் மக்களின் உளவியல் போக்கில் தற்போது புதிதாக மாற்றம் ஏற்பட்டுள்ளது. நடைபெறுவது உள்ளாட்சி தேர்தல் என்பதால் மக்கள் தங்களுக்கு சேவை செய்து வரும் சமூக செயற்பாட்டாளர்களை வெற்றி பெற செய்வர் என்றும் புதிதாக தமிழக அரசியல் களத்தில் அறிமுகமாகியிருக்கும் விஜய் மக்கள் இயக்கத்தினருக்கு விஜய் இரசிகர்களாக இருக்கும் வாக்காளர்களும் தமிழக மக்களும் தங்களது ஆதரவை வழங்கக்கூடும். இதன் காரணமாக இந்த முறை அ.தி.மு.க., தி.மு.க., பா.ஜ.க., பா.ம.க. ஆகிய கட்சிகளின் வெற்றியைக் கூட இவர்களால் மாற்றியமைக்க முடியும் என்றும் கணிக்கப்படுகின்றது.

அதே தருணத்தில் புதிதாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்று இருக்கும் தி.மு.க. மீது மக்களுக்கு பாரிய அளவில் அதிருப்தி இல்லாதிருப்பதாலும் ஆளும் கட்சி என்பதாலும் அரசு இயந்திரத்தை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள அனுமதி கிடைத்திருப்பதால் தி.மு.க.வினர் உற்சாகமாக களத்தில் பணியாற்றி வருகிறார்கள். இவர்களிடத்தில் ஆள் பலம், பண பலம், அதிகார பலம் என்று அரசியல் வலிமைக்கு தேவையான அனைத்தும் இருப்பதால் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. நூறு சதவீத வெற்றியைப் பெறுவது உறுதி என்று அக்கட்சியின் முன்னணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஆனால் கோவை மாவட்டத்தை மையப்படுத்திய கொங்கு மண்டலத்தில் கடந்த சட்டமன்ற தேர்தலை போலவே இந்த முறையும் தி.மு.க.வுக்கு ஒரு மாநகராட்சி மேயரை கூட கைப்பற்ற இயலாத நிலை இருப்பதாகவும் அ.தி.மு.க. அல்லது கூட்டணிக் கட்சிகளின் தயவுடன் அல்லது உள்ளடி வேலையுடன் தான் மேயர் பதவியை கைப்பற்ற முடியும் என்ற நிலை இருப்பதாகவும் அக்கட்சியின் மூத்த தொண்டர்கள் தெரிவிக்கிறார்கள்.

பா.ஜ.க. தனித்து போட்டியிடுவது அவசர கதியில் எடுக்கப்பட்ட தவறான முடிவு என்று அக்கட்சியின் மூத்த தலைவர்கள் பகிரங்கமாக கருத்து தெரிவித்திருக்கிறார்கள். பா.ஜ.க.வின் தமிழகத் தலைவரான அண்ணாமலை மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களையும் அவர்கள் தெரிவித்து வருகிறார்கள். குறிப்பாக அ.தி.மு.க. மீது தேர்தல் தருணத்தில் கடுமையான விமர்சனத்தை முன் வைத்த நயினார் நாகேந்திரன் மீது கடும் கோபத்தில் இருக்கிறார்கள். இவ்விடயத்தை அவர் சரியாக கையாளவில்லை என்றும் பா.ஜ.க. அ.தி.மு.க. உறவில் ஏற்பட்ட விரிசலுக்கு இதுவே காரணம் என்றும் அவர்கள் குற்றம் சுமத்துகி ார்கள். ஆனால் தமிழக பா.ஜ.க. தலைவரான அண்ணாமலையோ 'நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் மட்டும் பா.ஜ.க. தனித்து போட்டியிடுகிறது. 2024ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் வரை அ.தி.மு.க.வுடனான கூட்டணி தொடரும்' என்று விளக்கமளித்திருக்கிறார்.

இதனிடையே அண்மையில் நிறைவடைந்த ஊரக உள்ளாட்சித் தேர்தலில் கள்ளக்குறிச்சி உள்ளிட்ட இரண்டு மாவட்டங்களில் தனித்து போட்டியிட்ட பா.ஜ.க. போட்டியிட்ட அனைத்து இடங்களிலும் வெற்றி பெறவில்லை என்றும் 9சதவீத வாக்குகளை மட்டுமே பெற் றார்கள் என்றும் சுட்டிக் காட்டி இதனை மையப்படுத்தி தான் நகர்புற உள்ளாட்சித் தேர்தலில் பத்து சதவீத அளவிற்கு ஒதுக்கீடு செய்ய அ.தி.மு.க. முன் வந்தது என்றும் ஆனால் கள யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளாத பா.ஜ.க. சென்னை மாநகராட்சி உள்ளிட்ட ஐந்து மாநகராட்சி மேயர் பதவியை கேட்டதுடன் மட்டுமில்லாமல் தமிழகம் முழுவதும் 30சதவீத இடங்களை ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டது. இந்தக் கோரிக்கையை அ.தி.மு.க.வினர் ஏற்க மாட்டார்கள் என்று தெரிந்தே பா.ஜ.க. முன்வைத்தது.

அவர்கள் தனித்து போட்டியிட வேண்டும் என்று பேச்சுவார்த்தைக்கு முன்னரே தீர்மானம் எடுத்து விட்டு தான் பேச்சுவார்த்தையில் பங்கு பற்ற வந்ததாகவும் குறிப்பிடுகின்றனர் அ.தி.மு.க.வின் மூத்த நிர்வாகிகள். இவ்வாறிருக்க தற்போது தமிழகத்தில் அரசியலில் ஈடுபட்டு வரும் பா.ஜ.க. மக்களின் மனங்களை வெல்வதற்கான எந்த விடயங்களிலும் தீவிரமாக களப்பணி ஆற்றாததால் மக்கள் பா.ஜ.க.விற்கு வாக்களிப்பார்கள் என்பது சந்தேகமே. அக்கட்சியின் தொண்டர்களே முழுமையாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு, மக்களை வாக்களிக்க வாக்குச்சாவடிக்கு அழைத்து வருவார்கள் என்பதும் சந்தேகமே. அத்துடன் பா.ஜ.க., தமிழகத்தில் மேற்கொண்டு வருவது அதிகார துஷ்பிரயோக அரசியலே தவிர மக்கள் விருப்பத்தை அறிந்து அக்கட்சி செயல்படவில்லை.

இதனால் தமிழகத்தில் 30சதவீதத்திற்கும் மேலான வாக்கு சதவீதத்தைக் கொண்டிருக்கும் அ.தி.மு.க.வை, மூன்று சதவீதம் மட்டுமே வாக்குகளை கொண்ட பா.ஜ.க. தங்களுடைய ஆட்சி அதிகாரத்திற்கு உட்பட்ட வருமானவரித்துறை, அமலாக்கத்துறை ஆகிய அரசு இயந்திரங்களை மட்டுமே வைத்துக் கொண்டு அச்சுறுத்தி கையகப்படுத்த நினைப்பது தவறான அரசியல் அணுகுமுறை என்பதை அ.தி.மு.க.வினர் தற்போது உணர்ந்து இருப்பதால் இந்த முறை அ.தி.மு.கவினர் தங்களின் ஜென்ம விரோதியான தி.மு.க.வினரை எதிர்த்து தேர்தல் அரசியல் பணியில் ஈடுபட்டு தங்களின் வெற்றியை மீண்டும் புதுப்பிப்பார்கள் என்று கூறப்படுகின்றது.

அ.தி.மு.க. பா.ஜ.க., பா.ம.க. ஆகியவை தனித்து போட்டியிடுவதாலும் ஆளும் கட்சியாக இருந்தாலும் கூட்டணி கட்சிகளின் ஒருமித்த ஆதரவில்லாமல் தி.மு.க. கூட்டணியுடன் போட்டியிடுவதாலும் களத்திற்கு புதிதாக அறிமுகமாகியிருக்கும் விஜய் மக்கள் இயக்கத்தினராலும் எதிர்வரும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காது. இருப்பினும்



மக்களின் தெரிவு என்பது எப்போதும் புதிரானது என்பதால் கணிப்புக்கள் கூட தவறாகிப் போய்விடும் நிலையே உள்ளது.

## ஆறு கட்சிகளின் கடிதமும் அரசியல்...

(19ம் பக்கத் தொடர்ச்சி) ஏனெனில் அப்போது தான் வடக்கு கிழக்கில் சீனப் பிரசண்ணத்தை தடுக்கக் கூடிய வல்லமையை தமிழர்கள் பெற்றிருப்பார்கள். பின்னர் எதற்காக 13 தொடர்பில் பேச வேண்டும்? விடயங்களை வேறு கண்ணோட்டத்தில் நோக்க வேண்டும். இந்த இடத்தில்தான் ஆறு கட்சிகளின் கடிதத்தை விமர்சிப்பவர்கள் அனைவருமே தவறு செய்கின்றனர்.

அதாவது இந்தியாவை நோக்கிய கோரிக்கை எப்படியானதொரு சூழலில் முன்வைக்கப்பட்டிருக்கின்றது? கோட்டபாய ராஜபக்ச தலைமையிலான ஆட்சியாளர்கள் என்ன செய்ய முயற்சிக்கின்றனர்? கோட்டபாய அணியினர் புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவர முயற்சிக்கின்றனர். முதலாவது வரைபில் மாகாண சபை இல்லையென்னும் செய்தியும் வெளியாகியிருக்கின்றது. அரசியல் யாப்பின் மூலம் ஓரளவு வாய்ப்பை வழங்கிவரும் 13வது திருத்தச்சட்டத்தையும் முற்றிலுமாக இல்லாமலாக்குவதற்கான அரசியல் சதியொன்று திட்டமிடப்படுகின்றது.

இவ்வாறானதொரு சூழலில்தான், தமிழ் கட்சிகள் அதனை தடுத்து நிறுத்தும் ஒரு தந்திரோபாய நகர்வாக இந்த நகர்வை மேற்கொண்டிருக்கின்றனர். ஈழத் தமிழர்களுக்கு சாதகமாக இருக்கின்ற ஒரேயொரு துருப்புச் சீட்டு இந்தியாவிற்கான துருப்புச் சீட்டாக மாற்றப்பட்டிருக்கின்றது. ஏனெனில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை பயன்படுத்தும் வல்லமை இந்தியாவிற்கு மட்டும் தான் உண்டு. ஆறு கட்சிகளின் கோரிக்கையை இந்த பின்புலத்தில்தான் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு விடயத்தை எதிர்ப்பதற்கு முன்னர் அது தொடர்பில் சரியான தெளிவை பெறுவது அவசியம். இந்திய தலையீட்டை எதிர்ப்பது தான் அகில இலங்கை தமிழ் காங்கிரசினதும் (முன்னணி) தமிழ் சிவில் சமூகத்தினதும் நிலைப்பாடென்றால் அதனை அவர்கள் தெளிவோடு நேர்மையாக செய்யலாம்.

## மீனவர் பிரச்சனையில் புலப்படாத எதிரி

(17ம் பக்கத் தொடர்ச்சி) இலங்கை மீனவர் களின் படகுகள் மூழ்கடிக்கப்பட்டு அவர்கள் உயிரிழந்த சம்பவங்களுக்குப் பின்னால் இருப்பவர்கள் யார்? இந்திய மீனவர்கள் அண்மைக் காலத்தில் இலங்கை கடற்கொள்ளையர்கள் தங்களைத் தாக்கி தொழில்நுட்ப கருவிகள் மற்றும் மீன் பிடி உபகரணங்கள், போன்றவற்றை பறித்துக் கொண்டதாக குற்றம் சாட்டுகின்றனர். அவ்வாறு கடற்கொள்ளையர்களாக இயங்குபவர்கள் யார்? இந்த உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும் வரை கண்ணுக்குத் தெரியாத அந்த எதிரி இரண்டு தரப்புக்களையும் மோதவிட்டுக் கொண்டே இருப்பான்.

## போர்களை புதிய யுகத்துக்கு

(16ம் பக்கத் தொடர்ச்சி) பிரிவினைவாதிகளுக்கு எதிராக அவற்றைப் பயன்படுத்தியது. அதிக தீவிரம் கொண்ட போர்க்களங்களுக்கு வெளியே, கிளர்ச்சியாளர்கள் மற்றும் போராளிப் பிரிவுகளால் ட்ரோன்கள் இன்னும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் ட்ரோன் அச்சுறுத்தல் ஒப்பீட்டளவில் நன்கு புரிந்து கொள்ளப்பட்டால், அதை எதிர்கொள்வது ஏன் மிகவும் கடினம்? இன்று பயன்பாட்டில் உள்ள பெரும்பாலான ட்ரோன்கள், பாரம்பரிய ராணுவ விமானங்களை விட சிறியவை மற்றும் பல்வேறு வகையான வான் பாதுகாப்புகள் அவற்றுக்குத் தேவைப்படுகின்றன" என்று ஷார்ரே கூறுகிறார். "அவை மெதுவாக பறக்கின்றன மற்றும் தரையில் பறக்கின்றன, அதாவது பல வான் பாதுகாப்பு அமைப்புகள் அவற்றை சுடுவதற்கு உகந்ததாக இல்லை."

பல நாடுகள் ட்ரோன்களுக்கு எதிரான நடவடிக்கைகளை உருவாக்க செயலாற்றி வருகின்றன, மேலும் காலப்போக்கில் போர்க்களங்களுக்கு மிகவும் பயனுள்ள ட்ரோன் எதிர்ப்பு அமைப்புகள் பரவுவதைக் காண்போம் என்று அவர் கூறுகிறார். குறைந்த விலை ட்ரோன்களை அதிக எண்ணிக்கையில் உருவாக்க முடியும் என்பதால், அதிகளவிலான ட்ரோன் தாக்குதல்களை எதிர்கொள்வது ஒரு சவால். 13 ட்ரோன்களைப் பயன்படுத்தி ரஷ்ய விமான தளத்திற்கு எதிராக 2018 இல் சிரியாவின் கிளர்ச்சியாளர்கள் நடத்தியது போன்ற பெரிய அளவிலான ட்ரோன் தாக்குதல்களை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். இருப்பினும் ட்ரோன்களின் பிரளயம் உண்மையான திரள் அல்ல என்று பால் ஷார்ரே வலியுறுத்துகிறார்.

# ஆறு கட்சிகளின் கடிதமும் அரசியல் பொய்களும்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
-யசீந்திரா -



ஜனநாயக அரசியலில் பொதுவாக ஒரு கூற்றுண்டு. அதாவது கீரைக் கடைக்கும் எதிர்கடை வேண்டும். அதாவது அரசியலில் ஆக்கபூர்வமான விமர்சனங்கள் இருக்க வேண்டும். அப்போது தான் அரசியலில் இடம் பெறும் தவறுகளை சரிசெய்து கொள்ள முடியும். ஆனால் விமர்சனங்கள் என்னும் பெயரில் பொய்கள் பரப்பப்படுமாக இருந்தால் அது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இயங்கும் ஆறு கட்சிகள் ஒன்றிணைந்து இந்திய பிரதமருக்கு அனுப்பிய கடிதம்



தொடர்பில் அளவுக்கதிகமாகவே பொய்கள் பரப்பப்பட்டிருக்கின்றன. 13வது திருத்தச்சட்ட எதிர்ப்பு என்னும் பெயரில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ் தேசிய மக்கள் முன்னணி) குறித்த கடிதம் தொடர்பில் பொய்களை கூறியது. தேர்தல் போட்டியை கருத்தில் கொண்டு செயற்படும் ஒரு கட்சியின் பொய்யென்று அதனை நாம் விளங்கிக் கொள்ளலாம். பொதுவாக ஒரு அரசியல் கட்சி மேற்கொள்ளும் நடவடிக்கையை பிறிதொரு கட்சி எதிர்ப்பதும் விமர்சனங்களை முன் வைப்பதும் விளங்கிக் கொள்ளக் கூடிய ஒன்று தான். ஆனால் தங்களை படித்தவர்கள் என்று கருதிக் கொள்ளும் தமிழ் சிவில் சமூகமும் கடிதத்தை படிக்காமலேயே அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கின்றது.

இந்த கடிதம் தொடர்பான முதலாவது பொய் 13வது திருத்தச்சட்டம் தொடர்பானது. அதாவது குறித்த ஆறு கட்சிகளும் 13வது திருத்தச்சட்டத்தை ஒரு அரசியல் தீர்வாக முன் வைத்திருப்பதாக கூறப்படும் பொய். இரண்டாவது பொய் ஆறு கட்சிகளும் சமஸ்டி கோரிக்கையை கைவிட்டு விட்டு தமிழ் மக்களின் அபிலாஸைகளை 13ற்குள் முடக்குவதற்கான சதியில் ஈடுபடுவதாக சொல்லப்படுவது. மூன்றாவது பொய் சீனாவை கட்டுப் படுத்துவதற்காக இந்தியாதான் திரைமறைவிலிருந்து இதனை செய்வதாகச் சொல்லப்படும் (கற்பனையான) பொய்.

உண்மையில் இந்த கடிதத்தில், அரசியல் யாப்பில் ஏற்கனவே இருக்கின்ற 13 திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான மாகாண சபை ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு என்று எங்குமே குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னர் அரசியல் தீர்வு தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. இலங்கை அரசாங்கங்கள் வழங்கிய வாக்குறுதிகள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டிருக்கும் விவகாரம் சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றது. 13வது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வாக முன் வைக்கப்பட்ட போதும் கூட, அது ஒரு அதிகாரப் பகிர்வாக அமையவில்லை, மாறாக, அதிகார பரவலாக்கமாகவே அமைந்திருந்தது என்னும் விடயம் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. இலங்கையின் அரசியல் யாப்பு ஒற்றையாட்சி அரசியல் யாப்பாக இருப்பதே இதற்கான காரணம் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

இந்த விடயங்கள் அனைத்தும் கடிதத்தில் தெளிவாக இருக்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் உரித்துள்ள நாடான இந்தியா 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தில் தலையீடு செய்ய வேண்டும், அத்துடன் 13இலிருந்து அர்த்தமுள்ள அரசியல் தீர்வொன்றை கட்டியெழுப்புவதற்காக இலங்கை அரசாங்கங்கள் வழங்கிய வாக்குறுதியை நிறைவு செய்வதற்கும் இந்தியா உதவ வேண்டும். அதாவது, 1987இலிருந்து இன்று வரையில் இலங்கை அரசாங்கங்கள் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக பிளவுபடாத இலங்கைக்குள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் வகையிலான அரசியல் தீர்வொன்றை காண்பதற்கும் இந்தியா உதவி செய்ய வேண்டும். இதனைத் தான் கடிதம் வலியுறுத்தியிருக்கின்றது. இதில் தமிழ் மக்களுக்கு எதிரான சதி எங்கிருக்கின்றது? 13 ஒரு அரசியல் தீர்வென்னும் விடயமே இதில் இல்லையே!

இந்த கடிதம் தொடர்பில் முன் வைக்கப்படும் பிறிதொரு விமர்சனத்தை பார்ப்போம். இந்தியாவை நோக்கி செல்வது சரி ஆனால் எதற்காக 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் குறிப்பிட வேண்டும் சமஸ்டிக் கோரிக்கை பற்றி மட்டுமே பேசியிருக்கலாமே? சில வேளைகளில் சிறுபிள்ளைத்தனமான அரசியல் கேள்விகளுக்கு கூட நாம் பொறுப்புடன் பதிலளிக்கத் தான் வேண்டும்.

13வது திருத்தச்சட்டம் என்பது இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக முன் வைக்கப்பட்ட ஒன்று. 1987இற்கு பின்னர் பல்வேறு விடயங்கள் இடம் பெற்றிருந்தாலும் கூட இன்று வரையில் இலங்கையில் நிலைத்திருப்பது அது ஒன்று தான். இலங்கையின் ஆட்சியாளர்கள் இன்றுவரையில் 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்க முற்படவில்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தம் தான் இதற்கான காரணம். அதே வேளை இந்தியாவில் எவர் ஆட்சி செய்தாலும் ஈழத்- தமிழர்கள் தொடர்பான அவர்களின் நிலைப்பாடு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்திருக்கின்றது. இதனைத் தான் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளியுறவுச் செயலரும் பிரதிபலித்திருந்தார். ஆகக் குறைந்தது 13வது திருத்தச் சட்டத்திலாவது நீங்கள் ஒன்றாக நிற்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த பின்னணியில் இப்போது இந்தியாவை நோக்கி செல்ல வேண்டுமென்றால் எவ்வாறு செல்ல முடியும்? இந்திய இலங்கை ஒப்பந்தத்தை விட்டு விட்டு செல்ல முடியுமா? இந்த அடிப்படையில் தான் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான 13வது திருத்தச் சட்டத்தின் பெயரில் இந்தியாவின் தலையீட்டை தமிழ் கட்சிகள் கோருகின்றன. அரசல்லாத மக்கள் கூட்டமொன்று பிறிதொரு நாட்டை நோக்கி செல்லும் போது அந்த நாட்டுக்கு ஏற்புடைய ஒன்றின் ஊடாகத் தான் செல்ல வேண்டும். அப்படி செல்வது தான் அறிவுபூர்வமான அரசியல் அணுகுமுறையாகும். இந்த அடிப்படையில் தான் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவை அணுகியிருக்கின்றனர். இதனை தவறென்று வாதிட முற்படுவர்கள் எவரிடமும் ஏற்றுக்கொள்ளக் கூடிய எந்தவொரு அறிவுபூர்வமான

மாற்று அணுகுமுறையும் இல்லை. மற்றவர்கள் மீது வசைக் கற்களை வீசுவதை தவிர அவர்களிடம் எதுவுமில்லை. இதனைத் தான் அகில இலங்கை தமிழ் காங்கிரசும் அவர்களுக்கு ஆதரவான கருத்துருவாக்கிகள் என்போரும் செய்து வருகின்றனர். இதிலுள்ள வேடிக்கையான விடயம் என்னவென்றால் அவர்களில் அனேகர் ஆறு கட்சிகளின் கடிதத்தை கூட சரியாக வாசிக்கவில்லை. வாசித்திருந்தால் இப்படியான சலசலப்புக்கள் ஏற்பட்டிருக்காது.

அடுத்த பொய் இந்தியா தொடர்பானது. இந்தியாவை புரிந்து கொள்வதில் எப்போதுமே ஒரு குழப்பம் இருந்து வருகின்றது. ஆனால் மீண்டும் மீண்டும் இந்தியா தொடர்பில் பேசுவதிலிருந்தே அனைவரும் ஒரு விடயத்தை ஏற்றுக் கொள்கின்றனர். அதாவது, தமிழர் பிரச்சினையில் இந்தியா ஒரு தவிர்க்கவே முடியாத நாடு. ஒன்றை தவிர்க்கவே முடியாதென்று நமக்கு தெரிந்து விட்டால் அதனை கையாளுவதற்கு முயற்சி செய்வது தானே சரியானது. எப்படி கையாளுவது? அதற்கான உபாயம் என்ன? ஆறு கட்சிகளின் கடிதம் தொடர்பில் படித்தவர்களால் எழுதப் பட்டதாக நம்பப்படும் தமிழ் சிவில் சமூகத்தின் அறிக்கையில் இவ்வாறு கற்பனை செய்யப்பட்டிருக்கின்றது.

அதாவது இலங்கையை சீனாவின் ஆதிக்கத்திலிருந்து அகற்றி மீள இலங்கைஇந்திய ஒப்பந்தத்தின் வழியே தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்த இந்தியா விரும்புகின்றது. அதற்காக தமிழ் மக்களையும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளையும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அரசியலமைப்புடன் பிணைக்கும் 13வது திருத்தச்சட்டத்தை உயர்த்திப் பிடிக்குமாறு இந்தியா அழுத்தம் கொடுக்கின்றது.

இது ஒரு அருமையான கற்பனைப் பொய். ஆனால் இதே கருத்தை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் (தமிழ் தேசிய மக்கள் முன்னணியின்) செயலாளர் செல்வராசா கஜேந்திரனும் குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது சீனாவின் பிடியிலிருந்து இலங்கையை மீட்டு இந்தியாவின் காலடிக்குள் கொண்டு வருவதற்கான முயற்சியையே தமிழ் கட்சிகள் செய்வதாக அவர் குறிப்பிடுகின்றார். 27ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஈழநாடு பத்திரிகையில் இந்த செய்தி பிரசுரமாகியிருந்தது. தமிழ் காங்கிரஸ் செயலாளரின் கருத்தையே தமிழ் சிவில் சமூகத்தின் அறிக்கையும் பிரதிபலிக்கின்றது. யார் யாருடைய ஆலோசனையில் இயங்குகின்றனர்? சிவில் சமூக அமைப்புக்கள் பொறுப்புனர்வுடனும் மக்களது நலனையும் கருத்தில் கொண்டு தங்களுடைய கருத்துக்களை முன் வைக்க வேண்டும்.

இலங்கையில் சீனாவின் பிரசன்னம் தொடர்பில் இந்த கட்டுரையாளர் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்தப் பத்தியில் விவாதித்திருக்கின்றார். சீன இந்திய அதிகாரப் போட்டி தொடர்பில் அளவுக் கதிகமாக கற்பனை செய்ய வேண்டாம் என்றும் இந்த கட்டுரையாளர் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றார். இலங்கையை மையப்படுத்தியிருக்கும் பலம்பொருந்திய நாடுகளுக்கிடையிலான பலப்பரிட்சையை கையாளுவதற்கான பலம் ஈழத் தமிழர்களிடம் இல்லை. இந்த பின்னணியில் இந்தியாவிற்கும் மேற்குலகதத்திற்கும் ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதை தவிர வேறு எந்தவொரு தெரிவும் ஈழத் தமிழர்களுக்கு முன்னால் இல்லை. இந்த அடிப்படையில்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு சீனா தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றது.

மேலும் பலம்பொருந்திய நாடுகளுக் கிடையிலான அதிகாரப் போட்டியை சிறிய நாடுகளின் அரசியலமைப்பின் மூலம் கட்டுப்படுத்த முடியாது. சர்வதேச அரசியலை சட்டக் கண்கொண்டு பார்க்கக் கூடாது. சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் பலம் பொருந்திய நாடுகள் செயற்படுவதில்லை. தமிழ் ஆயுத இயக்கங்களுக்கு இந்தியா எந்த சர்வதேச சட்டத்தின் கீழ் பயிற்சியளித்தது? அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை எந்த சர்வதேச சட்டத்தின் கீழ் பிரகடணம் செய்தது? எந்த சர்வதேச சட்டத்தின் கீழ் அமெரிக்க படைகள் ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டன? எந்த சர்வதேச சட்டத்தின் கீழ் ஈரானின் இரண்டாம் மட்ட தலைவரான காஸிம் சுலைமானி கொல்லப்பட்டார்? இப்போது ரஸ்யா, எந்த சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் உக்ரெயின் மீது படையெடுக்கப் போவதாக அச்சுறுத்துகின்றது? இந்த விடயங்களை சட்டக் கண்- கொண்டு பார்த்தால் இதற்கு பின்னாலுள்ள அரசியலை ஒரு போதுமே விளங்கிக் கொள்ள முடியாது. எனவே ஒரு வேளை சீனாவின் பிடியிலிருந்து இலங்கையை முற்றிலுமாக மீட்க வேண்டுமென்று இந்தியா விரும்பினால் அதற்கு 13வது திருத்தச் சட்டம் தேவையில்லை. ஒரு பிராந்திய சக்தி 13வது திருத்தச்சட்டத்தை நம்பித் தான் இலங்கை விடயத்தை கையாள முற்படுகின்றது என்பது நல்ல நகைச்சுவையாக இருக்க முடியும்!

இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றால் இந்தியா எந்த நேரத்திலும் இராணுவ ரீதியான தலையீட்டை செய்யும். இதுவே பலம் பொருந்திய நாடுகளின் இயல்பு. நிலைமை இவ்வாறிருக்கின்ற போது 13வது திருத்தச்சட்டத்தின் மூலம் இலங்கையை கட்டுப்படுத்துவதற்காக ஏன் இந்தியா தமிழ் கட்சிகளை பயன் படுத்த வேண்டும்? உண்மையில் அவ்வாறானதொரு நோக்கம் இந்தியாவிற்கு இருந்தால் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு சமஸ்டியடிப்படையிலான அதிகாரப் பகிர்வையல்லவா இந்தியா பெற்றுக் கொடுக்க வேண்டும். (18ம் பக்கம் பார்க்க)

# கிட்டு பூங்கா:- பிரகடனமும் அதன் பின்னும்

(19ம் பக்கத் தொடர்ச்சி) அப்பால் தாங்கள் கடந்த 10 ஆண்டுகளாக செய்யத் தவறியவற்றை இனிமேலாவது நிரூபித்துக் காட்ட வேண்டியிருக்கிறது. ஈழத்தமிழர்களின் அரசியலானது வழமையான ஒரு மிதவாத அரசியல் அல்ல.ஆயுத மோதல்களுக்கு பின்னரான அரசியல் அது. இனப்படுகொலை ஒன்றின் மூலம் சிதைக்கப்பட்ட ஒரு தேசத்தை கட்டியெழுப்பும் அரசியல். ஒரு தேசத்தை நிர்மாணிப்பதற்கான வெளியுறவுக் கொள்கை எனப்படுவது முதலாவதாகவும் அடிப்படையாகவும் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதில் இருந்து தான் தொடங்குகிறது. ஆனால் தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்டுவதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது கடந்த 10 ஆண்டுகளில் போதிய வெற்றிகளைப் பெறத் தவறியிருக்கிறது.

இப்பொழுதும் கூட பெரும்பான்மை கட்சிகள் இந்தியாவை நோக்கி திரும்பியிருக்கும் ஒரு பின்னணியில் முன்னணி மட்டும் தனித்து நிற்கின்றது. தனது வெளியுறவு இலக்குகளை முன் வைத்து விடாது உழைப்பதன் மூலம் தனது இலட்சியம் சரியானது என்பதை நிரூபிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் அக்கட்சிக்கு இப்பொழுது உண்டு.13க்கு எதிராக போராடியதைப் போன்று சமஸ்டியை கேட்டும் ரிஸ்க் எடுத்துப் போராட வேண்டும்.

இந்தியாவை நோக்கி ஒரு கூட்டு கோரிக்கையை முன் வைப்பதில் தமக்கு ஆட்சேபனைகள் கிடையாது என்று அக்கட்சியின் செயலாளர் கிட்டு பூங்கா எழுச்சிக்கு முதல் நாள் எனக்கு தனிப்பட்ட முறையில் சொன்னார். ஆனால் கிட்டு பூங்கா பிரகடனமும் உட்பட அக்கட்சியின் நடவடிக்கைகளை தொகுத்துப் பார்த்தால் அது நடைமுறையில் இந்தியாவை அணுகத் தேவையான சாத்திய வெளிகளைத் திறக்கும் ஓர் அரசியல் அல்ல. அப்படியென்றால் அக்கட்சியின் பூகோள அரசியல் வழிவரைபடத்தின்படி வேறு எந்த நாடுகளை அணுக வேண்டும் என்று அக்கட்சி நம்புகின்றது? தனது வெளியுறவு அணுகுமுறைக்கு வேண்டிய அமைப்புக்களை அக்கட்சி கொண்டிருக்கிறதா? ஆகிய கேள்விகளுக்கு அவர்கள் பதில் கூற வேண்டும்.

இதே கேள்விகளை இந்தியாவுக்கு கூட்டு கோரிக்கைகளை வைத்த கட்சிகளிடமும் கேட்கலாம். வெளிவிவகார அணுகுமுறை என்பது ஒரு கடிதத்தோடு முடிகிற விவகாரம் அல்ல. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவை நெருக்கடிக்குள்ளாக்கிக் கொண்டு இந்தியா தமிழ் மக்களை நோக்கி வரக் கூடிய நிலைமைகள் இன்னமும் ஏற்படவில்லை. கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தை பகைக்காத ஒரு தீர்வைத் தான் இந்தியா தமிழ் மக்களுக்கு தரலாம் என்றால் அது நிச்சயமாக 13 தாண்டாது. தமிழ் மக்களுக்கு கிடைக்கக் கூடிய எந்த ஒரு தீர்வின் பருமனும் புது டெல்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான நட்பின் பருமனுக்கு நேர் விகித சமனானது.

எனவே புது டெல்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான உறவில் முரண்பாடுகள் அதிகரிக்கும் போது தான் ஈழத் தமிழர்களுக்கு கிடைக்கக் கூடிய தீர்வின் பருமனும் அதிகரிக்கும். இது விடயத்தில் இந்தியாவை தமிழ் மக்களுக்கு சாதகமாக தலையிட வைக்கும் சக்தி மேற்படி ஆறு கட்சிகளுக்கும் உண்டா? அதற்காக உழைக்கத் தேவையான வழிவரைபடத்தையும் அமைப்புக்களையும் அக்கட்சிகள் கொண்டிருக்கின்றனவா? அதற்காக ரிஸ்க் எடுக்க அர்ப்பணிக்க அக்கட்சிகள் தயாரா?

கடந்த 12 ஆண்டுகளாக ஜெனிவாவை கையாள்வதற்கும் அமெரிக்காவை கையாள்வதற்கும் இந்தியாவை கையாள்வதற்கும் தாயகத்தில் தமிழ் மக்களிடம் கட்டமைப்பு சார்ந்த சிந்தனைகள் எவையும் இருக்கவில்லை. ஒரு பொருத்தமான வெளியுறவுக் கொள்கையோ வெளியுறவு கட்டமைப்போ இருப்பதாக தெரியவில்லை. வெளியுறவுக் கொள்கைகள் இராணுவ ரகசியங்கள் அல்ல. கொள்கைகளை நடைமுறைப் படுத்தும் உத்திகள் தான் இரகசியமாக இருக்க முடியும்.தமிழ்க் கட்சிகள் எவரிடமும் அவ்வாறு வெளியுறவு கட்டமைப்புக்கள் இருப்பதாக தெரியவில்லை.

இவ்வாறான ஒரு வெற்றிடத்தில் தான் டெலோ இயக்கத்தின் முன் முயற்சியால் இந்தியாவுக்கு ஒரு கூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டது. இங்கு மறுபடியும் அழுத்திக் கூற வேண்டும் ஒரு வெளியுறவு கட்டமைப்பு இல்லாத வெற்றிடத்தில் தான் அவ்வாறு 6 கட்சிகள் இணைந்து ஒரு முயற்சியை முன்னெடுத்திருக்கின்றன. இதுதான் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நிலையும்.

இப்படிப்பட்டதோர் வெற்றிடத்தில் கிட்டு பூங்கா பிரகடனத்திற்கு பின் தமிழ் அரசியலில் இது வேறு வெளியுறவு அணுகுமுறைகள் துலக்கமாக மேலெழத் தொடங்கி விட்டன. ஆனால் இந்த இரு வேறு வெளியுறவுப் போக்குகளும் பிரகடனங்களாகவும், கூட்டுக் கோரிக்கைகளாகவும் மட்டுமே இப்பொழுது காணப்படுகின்றன. வெளியுறவு அணுகுமுறை எனப்படுவது ஒரு கூட்டுக் கோரிக்கையோ அல்லது பிரகடனமோ அல்ல.அது ஒரு நடைமுறை அது ஒரு செயல் வழி. ஓர் அரசற்ற மக்கள் கூட்டமாகிய ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை வெளியுறவு அணுகுமுறை எனப்படுவது தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஒரு பகுதி. இனப்பிரச்சினை எனப்படுவது சாராம்சத்தில் ஓர் அனைத்துலக பிரச்சினை தான். அதற்கு அனைத்துலகத் தீர்வு தான் உண்டு. எனவே அனைத்துலகத் தரப்புகளை கையாள்வதற்கு வெளியுறவுக் கொள்கை மிக முக்கியம். அந்தக் கொள்கையை செயல்படுத்த உரிய கட்டமைப்புகள் அவசியம். கட்டமைப்புக்களுக்கூடாக உழைக்க வேண்டும், ரிஸ்க் எடுக்க வேண்டும்.

எனவே ஆறு கட்சிகளும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தனித்தனியே தமது இறுதி இலக்குகளை நோக்கி உழைக்கட்டும். யாருடைய வெளிவிவகார அணுகுமுறை தீர்க்கதரிசனம் மிக்கது என்பதனை வரலாறு நிரூபிக்கும்.

அந்தனியோ குரொம்சி கூறுவது போல புரட்சிகரமான அரசியல் என்பது வரலாற்றில் செயலூக்கமிக்க வகையில் தலையீடு செய்வதுதானேயன்றி 'சரியான' நிலைப்பாடுளை மேற்கொள்வதும் அவை சரியானவை தான் என நிரூபிக்கப்படப் போகும் நாளுக்காக காத்திருப்பதுமல்ல.

நன்றி— நிலாந்தன் இணையம்

## எந்த சக்திகள்?

(5ம் பக்கத் தொடர்ச்சி) வெளியாரை விட்டால் வேறு வழியில்லை. அண்மையில் ஆறு கட்சிகள் இணைந்து. இந்திய பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தையும் இந்த பின்புலத்தில்தான் நாம் நோக்க வேண்டும். எனவே கடந்த கால அனுபவங்களிலிருந்து நாம் விடயங்களை கற்றுக் கொள்ள வேண்டும். எந்தவொரு வெளிச் சக்தியும் தங்களின் நலனை நிறுத்துப் பார்த்துத்தான் தீர்மானங்களை எடுப்பார்கள். இதுதான் உலக யதார்த்தம். அவர்கள் தங்களது நலன்களுக்காக செயற்படும் போது. எங்களது நலன்களை வெறிக்கொள்வதற்கான வாய்ப்புக்களை தேட வேண்டியது எங்களுடைய கடமையாகும்.


A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

டொமினிக்கன் சுற்றுலா



ஒவ்வொரு மாதங்களிலும், இரண்டாவது கிழமைகளிலும், வேறு மாவட்டங்களுக்கும் வேறு நகரங்களுக்கும்
2022ம் ஆண்டு தை, மாசி, சித்திரை, வைகாசி, ஆனி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களிலும்
7 நாட்களுக்கு யாவும் உள்ளடக்கப்பட்டது

| 3 star | 3½ star | 4 star | 4½ star | 5 star |
|---|---|---|---|---|
| REGULAR C$1,250 | REGULAR C$1,500 | REGULAR C$1,750 | REGULAR C$2,000 | REGULAR C$2,250 |
| 25% OFF C$ 1,000.00 | 25% OFF C$ 1,250.00 | 25% OFF C$ 1,500.00 | 25% OFF C$ 1,750.00 | 25% OFF C$ 2,000.00 |


நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.
a1actour.com@gmail.com

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
விமான டிக்கெட் | தங்குமிட வசதி | விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை
காலை உணவு | மதிய உணவு | இரவு உணவு | மது பானம் | குளிர்பானம் | சுடுபானம்

3 மாதத்திற்கு முன்பு முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்
சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078, TORONTO, ONTARIO, M1R 5P8
FOR MORE DETAILS: OWNER & OPERATOR MR. RATHA FRANCISXAVIER
www.a1actour.com
facebook.com/Allcountriestour
416 644 7273 | 416 857 5252 | Cuba Cell: +53 555 915 57



# Amma Pawn Broker

# அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

**1.0%** முதல் **1.5%** வரை



## அதிரடி சிறப்பு வட்டி வீதம்



உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

**416-757-0034**
**416-994-3861**





# OM SIVA SHAKTHI ASTROLOGER CENTER

## Master : KASHI GURUJI

Over 40+ Years of Experience



**Horoscope, Hand & Face Reading, Know your Past, Present & Future**
கைரேகை, எண்ஜோதிடம், ஜாதகம் விளக்கம், வெத்திலையில் மை போட்டுப் பார்த்தல், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி அறிதல்



- ★கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை
- ★சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு
- ★திருமணயோகம், காதல் விவகாரங்கள்
- ★தொழில், மனை அபிவிருத்தி, முன்னேற்றம்
- ★லட்சுமி கடாட்சம், வாகனம், மனைப் பொருத்தம்
- ★விசா பிரச்சனைகள், கோர்ட் வழக்கு
- ★ஆரோக்கியம், செய்வினை கோளாறு
- ★பேய், பிசாசு, எதிரிகள் தொந்தரவு
- ★கண் திருஷ்டி, நாக தோசம் போன்ற

சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டு.
உடனே பண்டித் காசி குருஜியை சந்திக்கவும். All Religions welcome.

- ★Money Blessings
- ★Love Problem
- ★Health Problem
- ★Relationship Problem
- ★Husband & Wife Disputes
- ★Family Arguments
- ★Depression
- ★Sexual Problem
- ★Business Problem

PRIVATE & CONFIDENTIAL

- ★Peoples's Jealousy
- ★Enemy Problem &
- ★Marriage Problem

Get all your problems solved.

Specialist in bringing back loved ones.

Black Magic Removal in 24hours.

Open 7 days

100% Result Guaranteed. Give life long protection

Call for Appointment


**647-324-9991 | 437-833-7796**

Unit 16, 2857 Lawrence Ave East
Scarborough,M1P 2S8
/
2891 A, Derry Road East
Mississauga, ON, L4T 1A6


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்தையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அடுத்தவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்காமல் நேரடியாக செய்வது நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் நிலுவையில் உள்ள பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களின் நிர்வாக திறமை பளிச்சிடும். எதிர்ப்புகள் குறையும். காரிய தடை அகலும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சார்ந்த விஷயங்களில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். குடும்பத்தில் திடீர் குழப்பங்கள் தலை தூக்கும். அமைதியாக இருக்க முயன்றாலும் கூட மற்றவர்கள் வலுக்கட்டாயமாக பேசுவார்கள். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. அக்கம்பக்கத்தினரிடம் கவனம் தேவை. பெண்களுக்கு பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன்கள் கிடைக்கும்.




ரிஷபராசி அன்பர்களே! நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். மற்றவர்களுடன் இருந்த விரோதம் மறைந்து நட்பு ஏற்படும். வீண் செலவு குறையும். ராசிநாதனை செவ்வாய் பார்ப்பதன் மூலம் எதிலும் ஒரு வேகம் உண்டாகும். எந்த கடினமான சூழ்நிலையிலும் நிதானத்தை கடைப் பிடிப்பது அவசியம். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புத்தி சாதூர்யம் அதிகரிக்கும். பணி உயர்வு சம்பந்தமான தேர்வுகளில் தேர்ச்சி பெறுவீர்கள். குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். திருமண முயற்சிகள் கைகூடும். உறவினர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கும். குடும்பத்தில் பொன்னான தருணங்கள் நிகழும். பெண்களுக்கு மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும்.




மிதுனராசி அன்பர்களே! மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் சமூகத்தில் அந்தஸ்தும் மரியாதையும் கிடைக்க பெறுவீர்கள். வெளிநாட்டு பயணங்கள் செல்வீர்கள். சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடைபெறும். வழக்குகள் உங்களுக்கு சாதகமான நிலையில் இருக்கும். ராசியினை செவ்வாய் பார்ப்பதால் ஆரோக்கிய குறைபாடு நீங்கும். தொழிலை விரிவு படுத்துவது பற்றிய ஆலோசனை மேற்கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை அதிகரிக்கும். பங்கு மார்க்கெட்டில் முன்னேற்றம் காணப்படும். எடுத்த காரியம் நல்லபடியாக நடந்து முடியும். குடும்பத்தில் பிள்ளைகளால் நன்மை உண்டாகும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு திறம்பட செயல் படுவர். பெண்களுக்கு மனதில் தைரியம் உண்டாகும்.




கடகராசி அன்பர்களே! அறிவுத்திறன் அதிகரிக்கும். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. கலைகளில் ஆர்வம் பிறக்கும். வீண் ஆசைகள் தோன்றலாம். மனதை கட்டுப் படுத்திக் கொள்வது நல்லது. சின்ன விஷயங்களில் கூட மன நிறைவு உண்டாகும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடைப் பிடிப்பது நல்லது. அலுவலகத்தில் உங்களுக்கான அங்கீகாரம் அதிகரிக்கும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. குழந்தைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வீட்டில் உள்ளவர்களுடன் இருந்து வந்த மோதல்கள் குறையும். பெண்கள் எதிர்காலம் பற்றி முக்கிய முடிவுகளை எடுப்பர். வெற்றி பெற எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.




சிம்மராசி அன்பர்களே! எல்லா காரியங்களும் சுமூகமாக நடந்து முடியும். எதையும் வேகமாக செய்து முடிப்பீர்கள். செலவு அதிகரிக்கும். தடை தாமதம் விலகும். மற்றவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்துவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திப்பர். மேலிடத்தின் மூலம் அனுகூலம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். குடும்ப உறுப்பினர்கள் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்க பெறலாம். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை காணப்படும். நினைத்ததை நடத்தி முடிப்பீர்கள். சொத்து பிரச்னை தீர்வு பெறும். பெண்கள் எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிப்பர். மனத்துணிவு உண்டாகும். இறை வழிபாடு அவசியம்.





கன்னிராசி அன்பர்களே! சுப காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். வாகனங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் ஆக்கபூர்வமான செயல்களை மேற்கொண்டு வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பர். வியாபாரத்திற்கென்று புதிதாக இடம் வாங்குவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கூறிய பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பர். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். கணவன் மனைவிக்கிடையே சகஜநிலை நீடிக்கும். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் செயல்திறன் அதிகரிக்கும். உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். பெண்களுக்கு மனதில் இருந்த கவலை நீங்கும்.








துலாம் ராசி அன்பர்களே! மனதில் இருந்த வீண்கவலை நீங்கும். சுணங்கிக் கிடந்த காரியங்களில் வேகம் உண்டாகும். எதிலும் அளவுக்கு மீறாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தன போக்கு நீங்கும். தொழில் விஷயமாக வெளியூர் செல்ல நேரலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்புகள் கிடைக்க பெற்று அதனால் நன்மை அடைவர். மேலிடத்திலிருந்து பொறுப்புகள் அதிகமாக வழங்கப்படும். குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும். வீட்டிற்கு தேவையன பொருள்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். வீடு, மனை போன்ற முதலீடுகளில் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு தன சேர்க்கை உண்டாகும்.





விருச்சிகராசி அன்பர்களே! மனதில் நிம்மதி உண்டாகும். உதவி என்று வருபவர்களுக்கு தயங்காமல் உதவிகளை செய்வீர்கள். ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பாக ஒரு முறைக்கு மறுமுறை யோசித்து முடிவெடுப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடை பிடிப்பது நல்லது. வர வேண்டிய பணம் வந்து சேரும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். பணி நிமித்தமாக வெளியூர் பயணம் செல்ல வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்கள் யோசனையை கேட்டு நடந்து கொள்வது மனதிற்கு திருப்தியை தரும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுத்து மகிழ்வீர்கள். விருந்தினர் வருகை உண்டு. பிதுரார்ஜித சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். பெண்கள் காரிய வெற்றி அடைவர்.




தனுசுராசி அன்பர்களே! மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். எல்லா நன்மையும் உண்டாகி உடல் ஆரோக்கியம் பெறும். வாக்கு வன்மையால் எந்த காரியத்தையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைக்கும். உத்யோகஸ்தர்கள் வேலைபளு குறைந்து மகிழ்ச்சியுடன் காணப்படுவர். எல்லாவற்றிலும் முன்னேற்றம் காணப்படும். அலுவலகத்தில் இருந்து வந்த பிரச்னைகள் அகலும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். நண்பர்கள் உறவினர்கள் மூலம் தேவையான உதவி கிடைக்கும். வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். தாமதமாகி வந்த சுபகாரியங்கள் சிறப்பாக நடக்கும். பெண்களுக்கு மனக்கவலை நீங்கும். எதிலும் முன்னேற்றம் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளிலும் வெற்றி உண்டாகும். உங்களது செயல்களுக்கு யாராவது ஒருவர் உறுதுணையாக இருப்பர். பேச்சு திறமை கைகொடுக்கும். தொழில் வியாபாரம் மிதமாக இருக்கும். எதிர்பார்த்த பணவரத்து தாமதப்பட்டாலும் கைக்கு வந்து சேரும். தொழில் வியாபாரம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்ய வேண்டி இருக்கும். சக ஊழியர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்கள் உங்களை ஏதாவது குறை கூறுவார்கள். அனுசரித்து செல்வது நன்மை தரும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பெண்கள் செலவுகளை குறைப்பது நன்மை தரும். நட்பு வகையில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. மன குழப்பம் தீரும். மகிழ்ச்சி நீடிக்கும்.




கும்பராசி அன்பர்களே! மறைமுக எதிர்ப்புகள் குறையும். எடுத்த காரியத்தில் ஏற்பட்ட தடை தாமதம் நீங்கும். வழக்குகள் தகராறுகளில் சாதகமான பலன் கிடைக்கும். எந்த ஒரு விஷயத்திலும் மிகவும் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான போட்டிகள் நீங்கும். மனதில் உற்சாகம் உண்டாகும். பொருளாதார உயர்வு உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக காணப்படுவர். சக ஊழியர்களின் உதவியும் கிடைக்கும். அரசாங்க ரீதியிலான காரியங்கள் மிகச்சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் இருந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த மனக்கசப்பு மாறும். குழந்தைகளின் நலனில் அக்கறை செலுத்துவது அவசியம். தாய்வழி உறவினர்களிடம் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். பெண்களுக்கு உடல் ஆரோக்கியம் உண்டாகும்.




மீனராசி அன்பர்களே! எதிலும் தன்னம்பிக்கையுடன் ஈடுபட்டு காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். முக்கிய நபர்களின் அறிமுகமும் நட்பும் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் வேகம் அதிகரிக்கும். எதிர்பார்த்தபடி பொருட்களை அனுப்புவதில் இருந்த தாமதம் நீங்கும். பார்ட்னர்களிடம் இருந்த மனவருத்தம் மாறும். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு தக்க பலன் கிடைக்கும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து செல்வது நன்மை தரும். பிள்ளைகளிடம் அன்பாக பேசுவது நல்லது. பெண்களுக்கு மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் உண்டாகும். எதிர்பார்த்தபடி எல்லாம் நடந்தாலும் மற்றவர்கள் தவறாக புரிந்து கொள்ள நேரலாம் கவனம் தேவை.

**எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!**

**ஈழநாடு 29வது ஆண்டு விழா**

**சங்கீத சங்கமம் 2022**

**07 ஆகஸ்ட் 2022**

# 31ம்நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அனலைதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்**

**கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த**

## அமரர் உயர்திரு

## கோபாலபிள்ளை சின்னப்பு

**அன்னை மடியில்** 05 யூலை 1932 **ஐயனார் திருவடியில்** 16 ஜனவரி 2022

வளமான வாழ்வுக்கு வழிகாட்டிய ஐயாவே
பாசம் கொண்டு அழைத்து மகிழ்ந்த மாமாவே
அன்பை சொரிந்திட்ட தாத்தாவே அப்பப்பாவே
ஏணியென நின்றெமை உயர வைத்தீர்கள் ஐயா
ஓயாது உங்கள் பிரிவு நித்தம் வாட்டுகின்றதே
தங்ககுணத் தந்தையென்று தரணி போற்றிட
பங்கமிலாது வளமோடு புகழோடும் வாழ்ந்தீர்கள்
அன்பை நற்பண்பையும் ஊட்டி வளர்த்தீர்களே!
ஐயா எங்களோடு உடனிருந்த காலங்கள்
எங்களுக்கு ஏற்றமிகு இனிய பொற்காலங்கள்
தந்தையாய் கிடைத்ததை பெருமையாய் நினைந்து
உந்தனை உருக்கி ஒளிதந்த தெய்வமே
வாழும் காலமெல்லாம் உங்கள் நினைவோடு
வாழ்ந்து எம்பயணம் தொடர்கின்றோம்
எங்கள் குடும்பத் தலைவரின் இனிய நல் ஆத்மா
அனலை ஐயனார் திருவடிகளை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

வையத்துள் வாழ்வாழ்ங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் ஒருவராகி விட்ட எங்கள் குடும்பத்தலைவர் அமரர் கோபாலபிள்ளை சின்னப்பு அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு எங்கள் இல்லங்களுக்கு வருகை தந்து எங்கள் துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும்

பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட இரு தினங்களும் கடும் குளிர் காலநிலையையும் பொருட்படுத்தாது நேரில் வருகை தந்து இறுதி அஞ்சலி செலுத்தியோருக்கும் தகனக்கிரியைகளில் பங்கு பற்றியவர்களுக்கும்

உலகின் பல்வேறு தேசங்களில் இருந்தும் தொலைபேசி மூலமும் மின்னஞ்சல் மூலமும் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்

மலர் மாலைகள் அணிவித்தும் மலர் வளையங்கள் வைத்தும் கண்ணீர் வணக்க பிரசுரங்கள் வெளியிட்டும் இரங்கல் உரை நிகழ்த்தியோருக்கும்

தேவார திருமுறைப்பாடல்களை ஓதியோருக்கும் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகளை சிறப்புற செய்த அந்தண பெருமக்களுக்கும்

தினமும் எமது இல்லங்களுக்கு உணவு மற்றும் ஆகாரங்களை கொண்டு வந்து உதவிய அன்பு உள்ளங்களு க்கும் இம்மலரினை சிறப்புற அச்சமைப்பு செய்த ஜே.ஜே. அச்சகத்தினருக்கும்

எங்களுக்கு இன்னும் பல்வேறு வகையிலும் உடனிருந்து உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்கள் குடும்பத்தினரின் நெஞ்சார்ந்த நன்றியறிதலை தாழ்மையுடன் தெரிவித்து கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6




RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)




மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
KABIS
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness
• RESP
• Disability
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life




OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*




RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500




காப்புறுதிச் சேவையில் 20 ஆண்டுகள்
ஆதரவு தந்த அனைவருக்கும்
நெஞ்சார்ந்த நன்றி
DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
RRSP & RESP
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7